அகராதி நிகண்டு

௧

மகாமகோபாத்தியாய
வே. சாமிநாதையர் நூல்நிலையம்
ான்மியூர், சென்னை-600 041
1983

P31:4K
N83
69003

அகராதி நிகண்டு

பதிப்பாசிரியர்
டாக்டர் இரா. நாகசாமி

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
திருவான்மியூர், சென்னை-600041.
1983

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலைய வெளியீடு எண்-77.

முதல் பதிப்பு 1983—1500 பிரதிகள்

© மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

விலை ரூ. 15

Published with the financial assistance from the Ministry of Culture, Govt. of India.

Printed at RAJAN & Co. (Printers) 1, Goomes Street, Madras-1

அகராதி நிகண்டு

முன்னுரை

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் சேகரித்த பல அருந்தமிழ்ச் சுவடிகளில், 'அகராதிநிகண்டு' என்னும் பெயரில் உள்ள இச்சுவடி ஆழ்வார்திருநகரியிலிருந்து பெறப்பட்டதாகும். ஐயரவர்களது குறிப்பு "ஆழ்வார்திருநகரி தாயவலம் தீர்த்த கவிராயர் அவர்களது வீட்டு ஏட்டுப் புத்தகம் இது" என்று எழுதப்பட்டுள்ளது. இச்சுவடியில் 101 ஏடுகள் உள்ளன. ஓரிரண்டு ஏடுகள் ஒடிந்தும் இராமபாணப் பூச்சியினால் துளைக்கப்பட்டும் காணப்படுகின்றன. சுவடி முழுவதும் இருக்கிறது. ஆயினும் ஆசிரியர் "பல சொற்களை விசாரித்து எழுதவேண்டும்" என்று "இந்த அகராதி இதொரு பேதமாகச் சேர்த்திருந்ததை எழுதி வச்சிருக்குது உ நீடுழி வாழ்க உ ஏடுகள் குறையாக இருப்பது விசாரித்து எழுதவேணும்" என்று குறித்துள்ளார். ஆதலால் இந்நூலை மேலும் விரிவாக்க ஆசிரியர் கருதியிருந்தார் என்பது தெளிவு. சுவடியில் சில சொற்களுக்குப் பொருள் எழுதப்படாமல் விடப்பட்டுள்ளது. சில சொல் வர்க்கங்கள் இல்லை. பின்னர் சுவடியை வாசித்தவர் நகர வர்க்கம் இல்லை. "பகரவருக்கத்திலும் ககரம் முதலாக டகர வருக்கம் வரையிலும் இல்லை" என்று குறித்துள்ளார். இந்நிகண்டில் சுமார் 7500 மூலச் சொற்களும் மொத்தம் 22,500 க்கு மேற்பட்ட சொற்களும் இடம் பெற்றுள்ளன.

எழுத்தின் தொடக்கத்தில் "ககரம்," 'உகரம்', எனத் தனித்தலைப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. சொற்கள் தனித் தனியாக எழுதப்பட்டுப் பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஏட்டின் பக்கத்தையும் பல பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு சொற்கள் எழுதப்பட்டுள்ளன. இந்நிகண்டில் குற்றெழுத்து அகராதி முடிவுற்றபின் நெட்டெழுத்து அகராதி எழுதப்பட்டுள்ளது ஒரு தனிச் சிறப்பாகும்.

பொருள் எழுதும்பொழுது பொருள் முடிவுற்றது எனக்குறிக்க இறுதி எழுத்துப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. நெட்டெழுத்துப் பகுதியில் சில இடங்களில் இறுதி எழுத்தைப் பிரித்தும், சில இடங்களில் சுழியிட்டும் பொருள் முடிவுற்றதெனக் காட்டப்பட்டுள்ளது. நெட்டெழுத்து அகராதியில் சொல்லையும் பொருளையும் வேறுபடுத்த இடையில் கோடிடப்பட்டுள்ளது. சொற்களை எழுதும்போது முதல் எழுத்து மட்டுமல்ல, இரண்டாம் எழுத்திலும் அகர வரிசையை ஆசிரியர் பின்பற்றியுள்ளார்.

உயிர் ஈகாரம் இகரத்தில் சுழியிட்டு இ (ஈ) என எழுதப்பட்டுள்ளது. உயிர் எகர ஏகாரத்துக்கும் ஒகர ஓகாரத்துக்கும் வடிவில் வேறுபாடு இல்லை. உயிர்மெய் வடிவில் இரட்டைக் கொம்பு இடப்படவில்லை. சில எழுத்துக்கள் ஒன்றுக்கு ஒன்ருகப் பிறழ்ந்து காணப்படுகின்றன.

ன—ந (உ-ம்)	சென்ஞய்-செந்நாய்
ன—ண	துன்னு-துண்ணு
ற—ர	சக்கிருயுதம்-சக்கிராயுதம்
ழ—ள	பிழிறல்-பிளிறல்
ல—ள	துலக்கம்-துளக்கம்

முதலியன இவ்வாறு காணப்படுகின்றன. இவை அவ் வட்டார எழுத்து மரபாக இருக்கலாம். சில சொற்கள் திரிந்தும் காணப்படுகின்றன. (உ-ம்) பிருத்தி—பிராப்தி. எழுதும் பிழையால் ஓரிரு எழுத்துக்கள் விடப்பட்டுள்ளன. குடி-மருத நிலத்தூர்க் கொடிகள்-மருதநிலத்தூர்குடிகள். இங்குக் குடிகள் என்னும் சொல் கொடிகள் எனத் திரிந்து வந்தது. இப்படி வருவது இந்நூலாசிரியரின் காலப் பேச்சு வழக்கைக் குறிக்கலாம். இது போன்று பிறழ்ந்துள்ள சொற்களும் அவற்றின் திருந்திய வடிவமும் வருமாறு:

சுவடியில் உள்ளது.		செஞ்சொல்.		பொருள்.
குப்பாவம்	—	குப்பாயம்	—	சட்டை
கொலம்	—	கோலம்	—	நீரோட்டம்
கொறன்	—	கோற்றேன்	—	தேன்கூடு

சல்லி — சில்லி — வடம், கீரை, தேருருள், கீழ் வீடு.
சலிகம் — சலீகம் — பூசல்

சொற்களின் தொடக்கத்தில் ஒரு எழுத்து விடப்பட்டுப் பொருள் எழுதப்பட்டுள்ள சொற்களுக்கு உதாரணம்:—

தீசி-உதீசி-வடதிசை
துகம்-மதுகம்-தரா
தும்பரம்-உதும்பரம்-செம்பு.

சி என்னும் எழுத்து தி என்று மாறி வந்ததற்கு உதாரணம்.

தேசி-தேதி-நாய்.
குறில் நெடிலாக மாற்றம் பெற்றதற்கு உதாரணம்
தொகம்-தோகம்-அற்பம்.
தெறுக்கால்-தேறுக்கால்-தேள்
நெடில் குறிலாக மாறியதற்கு உதாரணம்.
மோத்தை-மொத்தை-வெள்ளாட்டேறு

ஆங்காரம்-மகிதை. இங்கு மமதை என்னும் பொருள் மகிதை எனத் திரிந்தது. நாமதீப நிகண்டில் காணப்படும் வீதா என்னும் சொல் இவ்வகராதி நிகண்டில் பிதா என்று வந்துள்ளது.

வகர பகர பேதங்களுக்கு உதாரணம்
விதி-பிதி-குணம்.
விருச்சிகன்-பிருச்சிகன்-ஆதித்தன்

அனங்கம்-இருவாட்சி. இச்சொல்லில் 'அ' என்னும் எழுத்து மகர அகரமாக மனங்கம்-இருவாட்சி என்று வந்துள்ளது,

பகர இகரம் மகர இகரமாகப் பிழைபடத் திரிந்ததற்கு உதாரணம்:—

பின்னம் - மின்னம் - வேறுபாடு. சிவன் என்ற சொல்லுக்கு விட்டுணு எனப் பொருள் தந்துள்ளார் இந் நூலாசிரியர். புத்தன் என்ற சொல்லுக்கு நெடுமால் எனப் பொருள் கொண்டுள்ளார் ஆசிரியர். திருமாலின் பத்து

அவதாரங்களில் புத்தாவதாரம் ஒன்று எனப் பாகவதம் கூறுகிறது. நான் என்னும் சொல் ஆங்காரம் என்ற பொருளில் இந்நிகண்டில் வந்துள்ளது. நான் என்னும் சொல்லுக்குத் தன்மை ஒருமைப் பெயர் என்று இலக்கண வழக்கில் தமிழ் அகராதி தொகுதி 4இல் பொருள் தரப் பட்டுள்ளது. இந்த அகராதி நிகண்டின் ஆசிரியர் 'நான்-ஆங்காரம்' என்று தத்துவ வழக்கில் பொருள் தந்துள்ளார். கோசம் என்ற சொல் உறை என்று பொருள் தரும். இதில் ''உ'' என்ற எழுத்தை மகர உகரமாக்கி முறை என்று பொருள் தந்துள்ளார் இந்நூலாசிரியர். கோசிகம் என்ற சொல் சாம வேதம் என்ற பொருளைத் தருகிறது. இச் சொல்லுக்கு ஏட்டுச் சுவடியில் காம நூல் எனப் பொருள் எழுதப்பட்டுள்ளது. இப்பொருள் பிழையுடையது. சாம நூல் என்று வருவதற்கு மாருகக் காம நூல் என்று தவருக எழுதப்பட்டுள்ளதோ என்று தோன்றுகிறது. ககர ஓகார வருக்கத்தில் 'கோமாயு' என்ற சொல்லுக்கு 'நரி' எனப் பொருள் எழுதப்பட்டுள்ளது. மகர ஆகார வருக்கத்தில் மாயு என்ற சொல் நரி என்ற பொருளில் வந்துள்ளது. மடு-குளம், பசுவின் முலை எனப் பொருள் தரப்பட்டுள்ளது. மடி என்ற சொல்லின் பொருள் பசுவின் முலையாகும். சக்கரம் என்ற சொல்லுக்குத் துயிலொழிதல் என்று பொருள் தரப்பட்டுள்ளது. சாக்கிரம் என்ற சொல்லே துயிலொழிதல் என்ற பொருள் தருவதாகும். தமனியம் என்ற சொல்லுக்குப் பொன் என்பது பொருளாகும். இப்பொருளுடன் பிரமா என்றபொருளும் இச்சொல்லுக்குத் தரப்பட்டுள்ளது. இது குணத்தையும் குணத்தை உடைய குணியையும் ஒன்ருகப் பொருள் கொண்டுள்ளமைக்கு எடுத்துக்காட்டாகும். தேகம் என்ற சொல்லுக்கு உடம்பு என்ற பொருளுடன் ஐயம் என்ற பொருளும் இந்நிகண்டில் காணப்படுகிறது. சந்தேகம் என்ற சொல்லுக்கு உரிய 'ஐயம்' என்ற பொருளையே தேகம் என்ற சொல்லுக்கு இந்நூலாசிரியர் கொண்டுள்ளார் என்று தோன்றுகிறது. மித்திரர் என்ற சொல்லுக்கு எதிர்ப்பதமாகிய சத்துரு என்ற சொல்லையே பொருளாக இந்நூலில் கொடுக்கப் பட்டுள்ளது. பந்து என்ற சொல் பெந்து என்று வருவது போன்று தமரம் என்ற சொல் தெமரம் என்று இந் நிகண்டில் எழுதப்பட்டுள்ளது.

கால வழக்கையும் வட்டார வழக்கையும் அறிந்து கொள்ளப் பெரும்பாலும் சொற்களும் பொருள்களும் சுவடியில் உள்ளவாறே இங்குப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. தெளிவு பெறும் வகையில் அடைப்புக் குறியீடுகள் கீழ்வரு மாறு பயன்படுத்தியுள்ளேன்.

[ ] செல்லரிக்கப்பட்ட இடங்களில் எழுத்துக்கள் சேர்க்கப்பட்டவை.

[*] எழுதும்போது விடப்பட்டுப் பதிப்பாசிரியரால் சேர்க்கப்பட்டவை.

( ) சுவடியில் உள்ளன. ஆனால் நீக்கப்படவேண்டி யவை.

இந்நிகண்டைத் தொகுத்த ஆசிரியர் பெயர் தெரிய வில்லை. சதுரகராதி போன்ற நூல்கள் தோன்றியபிறகு இவ்வகராதியை ஆசிரியர் தொகுத்திருக்க வேண்டும். ஏனெனில் சொல்லின் முதல் எழுத்து மட்டுமல்ல, இரண்டா வது எழுத்தையும் அகரவரிசைப் படுத்தி எழுதியுள்ளமை இதைச் சுட்டும். ஆதலின் இது 19ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட நூல் எனலாம். அகராதி தொகுக்கும் பணி தொடர்ந்து நம் ஆன்றோர்களால் பின்பற்றப்பட்டது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு எனலாம். இது காறும் இது அச்சிடப்படவில்லை. 1958ஆம் ஆண்டு சாமிநாதையர் நூலகத்தாரால் படி எடுக்கப்பட்டுள்ளது. படியெடுத்தவர் இந்நூலகத்தில் பணியாற்றிய எம். வரதன் என்பவர் ஆவார்.

ஐயரவர்கள் நூல் நிலைய வெளியீடான சுவடிகளின் விளக்கம் முதல் தொகுதியில் இச்சுவடியின் தொடர் எண் 368 என்று அச்சிடப்பட்டுள்ளது. இந்நூல் சிதம்பரம் ரேவணசித்தர் எழுதிய அகராதி நிகண்டினின்றும் வேறானது.

இந்நூலை ஆய்ந்து பதிப்பிக்கும் பணியில் திருவாளர்கள் எஸ். சாயிராமன், எஸ். விஸ்வேஸ்வரன், N. பாபு ஆகியோர் பெரிதும் உதவியுள்ளனர். பதிப்புக்கு உரிய வகையில் படி எடுத்தளித்தவர் நூலகர் செல்வி. முத்துலக்ஷ்மி. இவர்கள் பாராட்டுக்கு உரியவர்கள். நூலை அழகுற திரு. ராஜன் கம்பெனியார் அச்சிட்டுள்ளனர். அவர்களுக்கும் எமது நன்றி.

இரா. நாகசாமி.

AKARATI NIGANDU.

Preserved in a single palm leaf manuscript, the present work was originally in the collection of Tayavalam tirtha Kavirayar family of Alvarthirunagari, later collected by Dr. U. V. Swaminatha Iyer and is now in the collection of Dr. U. V. Swaminatha Iyer Library.

There are altogether 101 leaves in the bundle. The Mss is complete though one or two leaves are broken and a considerable number damaged by worms. It is a word to word dictionary arranged in alphabetical order modelled on the dictionaries of the west, with the difference, that the words beginning with short vowels are given first and the ones beginning with long vowels given later. The compiler has left a note that "more words and their meanings should be compiled from the learned public". For a few words the meanings are not given. The author ought to have thought of noting them later after enquiry. The name of the author is however not known.

The dictionary gives meanings for about 7500 words, the total number of words compiled being over 22,500.

In the traditional Nigantus, composed in metrical form, the alphabetical order is confined to the first letter only, but in this compilation attention has been paid to the second letter as well. Obviously the work should have been composed after the model of "Caturakaradi" etc, compiled by the European missionaries. Though the exact date of the compilation is not known, it seems to be a work of the 19th Cent. AD.

In editing and seeing the work through the press, Thiru S. Sairaman of Dr. U. V. Swaminatha Iyer Library Thiru S. Visweswaran and my son N. Babu rendered great assistance and their services are acknowledged with grateful thanks. Selvi S. Muthulakshmi, the Librarian of Dr. U. V. Swaminatha Iyer Library deserves thanks for preparing a clean copy for the press. Messers Rajan & Co., have done a good job of printing and I record my appreciation of their work. The book is printed and published with a generous grant from the Ministry of Culture, Government of India.

Under the personal supervision and direction of Smt. Rukmanidevi of Kalakshetra, the adhyaksha of the U. V. S. Library and with the active assistance of Sri K. Subrahmanya Iyer, the treasurer (who is the grandson of Dr. U. V. Swaminatha Iyer) the Library is continining to do useful service to the cause of ancient Literature.

R. Nagaswamy

அகராதி நிகண்டு

முதலாவது குற்றெழுத்து அகராதி

அகராதி நிகண்டு

அகரம்

அகமுனி-ஆழ்வார்கள், அகத்தியன்.

அகலுள்-ஊர், நாடு, மார்பு, விரித்துரை, அகலம், பெருமை, அகப்பால், சிவன்.

அகளம்-தாழி, மிடா, போர்க்களம்,

அகளங்கன் - களங்கமில்லாதவன்.

அக்கு-கண், வெறுப்பு, சங்குமணி, எலும்பு, பலகறை, சாரிகைச்சொல், விடைமுதிப்பு, (எருத்துதிமில்)

அக்கம்-கண், நெல்லு, கயிறு.

அக்குரன் - இடைவள்ளல், உழவு.

அகலம்-மார்பு, பெருமை.

அகிஞ்சனன்-தரித்திரன்.

அகம்-மலை, வீடு, மனம், உள்ளம்.

அரவம்-இடப்பெயர், உயிர்.

அஃகுலி-அப்பம், சிற்றுண்டியான தின்பண்டம்.

அஃகல்-குறைதல், சுருங்கல்.

அகல்-மண்கலம், நீங்கல்.

அகழ்-அகழி, ஆழம், தோண்டுதல், கோட்டைப்பதனம் (மதில்சூழ் கிடங்கு).

அதள்-தோல்.

அகலிடம்-பூமி.

அகரு-அகில்.

அக்கி-கண்.

அகனத்தம்-செங்கழுநீர்.

அகலியம்-மரப் பொதுப்பெயர்.

அகண்-ஆதுலர்.

அக்காரம்-சர்க்கரை, ஆடை.

அகரல்-அகலம்.

அகணி-வயல், மருதநிலம், உள்ளிடம், மடல்களின் உள்ளிடம்.

அகரம்-ஊர், எழுத்து.

அகாரம்-பாலையாழ், அகரவெழுத்து.

அகப்பா-அகழ், அரண், பரிகை, (மதிலுள் மேடை) கோட்டைப்பதனம்.

அகத்தி-அச்சுதம், அத்திமரம், அகத்தி.

அகாரர்-செட்டியள்

அக்கரம்-காலம், எழுத்து, வியாதிமுத்தி.

அக்கரை-எதிர்க்கரை.

அக்கசாலையர்-கண்ணுளர், தட்டார்:

அகக்காழ்-கருங்காலி முதலாயின இனமரம்.

அகழி-அக......

அகம்-உள்ளிடம். ... பாவம்.

அகற்றல்-தாண்டல், நீக்கல்.

அகிலமுகம்-தண்ணீர்.

அகுர்-ஆகாயம்

அகமலர்ச்சி-ஆனந்தமாகிய பேரின்பம்.

அகன்-மணி.

அகடு-உள்ளிடம்.
அகவல்-ஆசிரியப்பா, ஓசை வினவியழைத்தல், மயிற் குரல், ஆடல்.
அகமார்க்கம் - அருமையிற் பாட்டுக் கூத்து,
அமைத்து-தரைத்தல், தாழ்தல், வருத்தல், அடித்தல், அறுத்தல், இறத்தல், வேதனை ஒழிதல்.
அகளங்கமூர்த்தி - புத்தக் கடவுள், சோழன், அழுக் கற்றோன்.
அகடு-வயிறு, நடு, பொல் லாங்கு, வேந்து.
அகி-பாம்பு, இரும்பு, விருத்திரா சுரன், புக்கு, கருடன். மயில்,
அகிலம்-பூமி முழுவதும்.
அக்கோ-அதிசயம்.
அகைத்தல்-எழுச்சி, செலுத்தல், வேதனை.
அகலே-ஆடல்.
அங்கதம்-பொய், தோள்வளை, அரவு, அசைச்சொல், மார்பு, ஒரு பாட்டு.
அங்கணம் - சேறுமுற்றம், சல தாரை, பொல்லா நிலம்.
அங்கம்-தேகம், தேகத்துறுப்பு, எலும்பு (சேறு).
அங்கிதம்-உடற்றழும்பு, ஆனைக் கால்.
அங்கி-சட்டை, நெருப்பு, கார்த் திகை நாள்.
அங்காரகம்-நெருப்பு, பூசுவன.
அங்காரகன்-செவ்வாய், அக் கினி.
அங்குரம்-ஆகாயம், முளை.
அங்குரித்தல்-முளைத்தல்.
அங்கல்-பொலிவு, இரங்கல், கேடு.
அங்கோலம்-அழிஞ்சின்மரம்.
அங்குசபாசன்-கணபதி
அங்காடி-கடை.
அங்குசம்-தண்ணீர், ஆனைத் துரோட்டி.
அங்கு-அவ்விடம்.
அங்குலி-விரல்.
அங்குல்-ஆகாயம், அணிவிரல்.
அங்கனை-பெண்
அங்கை-அகங்கை, கங்கை.
அங்கசன்-காமன்.
அங்கிரி-பாதம்.
அங்கவடி-குதிரைப்படி
அச்சு-மங்கலாதனம், தேரச்சு, ஆணி.
அச்சம்-பயம், அகத்தி, (ஐமை) அஞ்சலி.
அசறு-சேறு.
அ - - - -கூத்து, ஓசை, கேடு.
அசனம்-சோறு, அஞ்சனம், பட்டினி.
அச்சுதன்-மாயன், அழிவில்லா தவன், பலபத்திரர், வெள் ளரிசி, அறுகு கூட்டியணி வது.
அசைதல்-அமைதல், நோதல், தங்கல், சோம்பு, எட்டுதல், கட்டுதல்.
அசனி-இடி, வச்சிராயுதம்.
அசவுதல்-அழைத்தல்.
அசமம்-மயக்கம்.
அசும்-புகுவையாடு, நெல், மூவாட்டை, ஆடு.
அசர்-துக்கம், பூசாபூசல், தளர்ச்சி.
அசஞ்சலன்-சஞ்சலமில்லாத வன்.

அசலே-பூமி, சோம்பு.
அசம்பு-கிணறு, ஊற்றுறல், ஊறல்.
அசுரர்-இராக்கதர்.
அசுத்தம்-சுத்தமல்லாதது
அசுமம்-நாய்.
அசைப்பு-சொல்.
அசை-நிலேச்சொல், அசைதல், சோம்பு.
அசைவு-மந்திரம், இயங்கல்.
அசலம்-மலே.
அசிகம்-அம்பு.
அசிதம்-கறுத்த நிறம்.
அசி-படைக்கலம், வாள், அவமதிச் சிரிப்பு, பாம்பு, நெருப்பு.
அச்சுவம்-குதிரை, அரசமரம்.
அச்சோ-அதிசயம்.
அசைத்தல்-கட்டுதல்.
அசித்தல்-உண்டல்.
அசு-பாகம், சகதி.
அசேதம்-அறிவின்மை.
அசோகு-பிண்டிமரம்.
அசதி-நகைச் சொல், துட்டை.
அசோகுடைச் செல்வன் - புத்தன்.
அஞ்சிறை-அழகிய சிறை.
அசுரநாள்-மூலம்.
அசுணம்-பெரும்பாம்பு, கேகயப்புள்ளு.
அஞ்சனம்-ஆனே, கண்மருந்து, டி அண்...ண...ம்.
அஞ்சலி-காயாமரம்.
அஞர்-நோய், அச்சம், துன்பம், அறிவு.
அஞ்சி-மாதா.
அஞ்சலி-தொழுதல், பரவல்.
அஞ்சலிகை-தேனி.
அஞ்ஞை-பேதை, அறிவிலோர்.
அஞ்சா-நகாயுதம், சிங்கம்.
அஞலம்-வளம்பெறும் பறவை.
அஞ்சனம்-மை, கறுப்பு, திக்கயத் தொன்று.
அட்டமாநாகம்-வாசுகி, அனந்தன், பற்பநாபன், கார்க்கோடகன், தனஞ்செயன், அட்டமாகுளியன், சங்கபாலன், தக்கன் ஆக 8.
அட்டதிக்குப் பாலர், இந்திரன், அங்கி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆக 8.
அட்டமங்கலம்-கவரி, நிறைகுடம், கண்ணடி, தோட்டி, முரசு, விளக்கு பதாகை இணைக்கயல் ஆக 8.
அட்டமூர்த்தி-பார், நீர், தேயு, வாயு, ஆகாயம், சூரியன், இந்து இயமானென்றிவையே ஆக 8.
அட்டமாசித்தி-அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆக 8
அடக்கம்-ஒழுக்கம், ஒடுங்குதல்.
அடர்-ஐமை, தகடு, நெருக்கம், பொல்லாங்கு, வெற்றி, மங்கட் கூட்டம்.
அடங்கல்-பகைவர், முழுவதும், ஒடுக்கம்,
அடங்கர்-தண்ணீர்ச்சால்.
அடலே-சாம்பல், பூசல்.
அடிகால்-அடித்தல், ஆதி.
அடிமை-உரிமை, தொண்டு.
அடப்படு-புழுங்கல்.
அடம்பு-பாலிகை.
அடிசில்-சோறு.
அடவி-காடு.

அடிகள்-சுவாமி, மூத்தோர், தலைவி, அடியிற்றொடுவது, பாதுகம்.

அடல்-வெற்றி, ஆயும், வேதனை, பூசல், வலி.

அட்டகயமாவது - அயிராபதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபூமம், சுப்பிரதீபம்... ஆக 8.

அடுப்பு-பரணி நாள், அச்சம், சுல்லி.

அடும்பு-அச்சம், சாம்பல், அப்பம்.

அடு-கோறல்.

அடுத்தல்-கூடுதல், கொலை செய்தல்,

அடிச்சேரி-அடிக்குடில்

அடைய-முழுதும்

அடுக்கல்-மலை.

அடை-இலை, நெருக்கம், அப்பப்பணியாரம் சும்மாடு கனம்.

அடைவு-முறைமையாடல்.

அடைச்சல்-பெருகுதல்.

அடைந்தவர்-பந்துக்கள், அடைக்கலம் புகுந்தோர்.

அடையார்-சத்துருக்கள்.

அட்டை-குறைத்தலை, அட்டை, பேய்.

அட்டில்-அடுக்களை.

அடன்-நஞ்சு.

அட்டி-செஞ்சந்தனம்

அடகு-இலைக்கறி.

அட்டல்-கோறல்.

அணங்கு - தெய்வம், மாதர், வெறியாட்டு, வேலனுடல், மையல், நோய், வருத்தம், கொலை, மூதேவி, ஆட்டுமறி, அழகு.

அணி-படை வகுத்தல், அழகு, பெருமை, நிரை, நெற்றிப்படை, ஆபரணம், பிற்படை.

அண்ணல்-தலைமை, பெருமை, அணுகல், சிவன், சிறந்தோர் முல்லைத் தலைவன், அருகக் கடவுள், புத்தக் கடவுள், இராசா.

அணிமா - அட்டமா சித்தியிலொன்று.

அண்டம்-ஆகாயம், முட்டை, புழுகு, சட்டம், காக்கை.

அண்டசம்-அரவு, தவளை, முதலை, மீன், ஆமை, உடும்பு, பொத்திருப்பி, பறவை, பல்லி.

அண்டர்-தேவர், இடையர், பகைவர், அண்டயோனி, ஆதித்தன்.

அண்டகை-அப்பப் பணியாரம்.

அண்டம்-மடம், உறைதல்.

அணவல்-அடுத்தல், அடுதல், புல்லல்.

அணல்-மேல்வாய், ஏந்துதல் மிடறு, கீழ்வாய்ப்புறம்.

அனரி-அண்ணு.

அண்ணம்-அண்ணு, கீழ்வாய்ப்புறம், உண்ணுக்கு.

அணவுதல்-சார்தல்.

அண-பூழம்.

அண்மி-பொருந்தல்.

அணவால்-எட்டுதல்.

அணிமை-பிறவி.

அண்டங்காக்கை-காக்கையில் விகற்பம்.

அண்ணே-பேய், அறிவிலோர், வாவி.

அணு-வழி, புதன்.

அணியல்-மாலை, ஒப்பித்தல்.
அணு-சிறுமை, ஆன்மா.
அணிகலம்-ஆபரணம்.
அணை-புனற்கரை, மெத்தை, கூடுதல்.
அணிகம்-தண்டிகை.
அணுக்கர்-சருவேசரனை விட்டு நீங்காமை.
அதிர்ப்பு-ஒலி, நடுக்கம்.
அத்திரம்-அம்பு, விடுபடை.
அதிர்த்திடல்-உரப்பல்.
அதிரல்-ஒலி, தூறுன செடி.
அதிர்ச்சி-ஆரவாரம்.
அதமில்லென்றல்-சாதல்.
அதரில்-நுண்மணல்.
அதிர்வை-கரி.
அத்தியாய்-மது.
அதந்தீவாம்-நாவிலாமை.
அதங்குதல்-சுழித்தல்.
அதரம்-உதடு, கீழ்உதடு.
அத்தியானம்-வாசித்தல்.
அத்தாணி-அரசிருக்கை.
அத்தை-மூத்தோர்கள், மாமி, தலைவி, ஊமத்தை, அத்தியர், அததியர்.
அத்தன்-புத்தக் கடவுள், பிதா
அதட்டல்-உரப்பிச்சொல்லுதல்
அத்தீபம்-ஆனை.
அதிதம்-மோர்.
அதள்-தோல்.
அதட்டம்-சற்பத்தின் பல்.
அதம்-அத்திமரம்.
அதவம்-அத்திமரம்.
அதவுகை-நெடுங்குகை
அதவு-உதும்பரம், அத்திமரம்.
அதோமுகம் - கடற்கழி, முகத்துவாரம்.
அதர்-நுண்மணல், வழி.
அதிங்கம்-அதிமதுரம்

அத்தோ-அதிசெயம்.
அத்தி-பிரம அவிராபதம்.
அத்திகை-குதிரை.
அத்திநாள்-புனர்ப்பூசம்
அத்து-சாரியைச் சொல், செம்மை, வரைநாள், இசைப்பு.
அத்தவாளம்-உத்தரீகம்.
அத்தம்-பொன், கை, நாள், நடவை, காடு, பாதி, மறைதல், வழி, உள்ளகழிப்பு, அரியநெறி, கண்ணுடி, வாகு, வலையம், மருந்தின் பொதுப் பெயர்.
அத்தநாள்-பாதிநாள், நக்ஷத்திரம்.
அதக்கம்-செம்பஞ்சு.
அத்தி-ஆனை, எலும்பு, மரம், கடல், கட்டல், புதியவர்.
அத்தினி-பிடியானை (பெண்யானை).
அத்திரி-குதிரை, கழுதை, மலை, ஒருமூலி, ஒட்டகம், உலைத்துருத்தி.
அதிகம்-திரள், படை, மிகுதி, பொலிவு, இலாபம்.
அதிரேகம்-அதிகம்.
அது-ஆறும் வேற்றுமை உருபு.
அதிகாரம்-பனுவல்
அந்தம்-கத்தூரி, ஈறு, அழகு, பொன், விண், முடிவிலாமை.
அந்திகை-கிளி.
அந்தகன்-நமன், குருடன்.
அந்தகாரம்-இருட்டு, நரகம்.
அந்தராயம்-தீது.
அந்தித்தல்-பொருந்தல்.
அந்திரித்தல்-கவளீகரித்தல்.
அந்தரி-துர்க்கை, உமை.

அந்த-கீழ்த்திக்கு,அ ந் த ட் டு க் கிழக்கு.

அந்தோ-அதிசெயம்.

அந்தரநாதன்-இந்திரன்.

அந்தரம்-ஆகாயம், முடிவு, பேதம்.

அந்தி - வண்ணவன், சிவன், அசைநிலை, அலகு, மூச்சந்தி.

அந்தி-சந்தியாகாலம்.

அந்தாரம்-குறிஞ்சியிராகம், அந்தாளி இராகம்.

அந்தணர் அறு தொழிலாவது- ஒதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

அந்தாமம் - அழகிய மாலை வைகுந்தம்.

அந்தராளன்-நாலுவங்கிய த் து முறையிலும் முறைமாறிப் பிறந்த பிள்ளையள்; (பெற்ற பிள்ளையள்) பேர்.

அந்தப்புரம்-இராசபத்தினி இருப்பிடம்.

அப்பம்-சிற்றுண்டி.

அப்பன்-பிதா.

அபரிமிதம்-அளவிறந்தது.

அபாயம்-வஞ்சனை.

அபாரம்-அளவிறந்தது.

அபாங்கம்-கடைக்கணித்தல்.

அபங்கன்-பங்கமில்லாதவன்.

அபரம்-முதுகு, ஆபத்து, வீண்.

அப்பு-தண்ணீர்.

அபையம்-பொழுது, முறையிடுதல்.

அபையன்-சோழன், பயமில்லாதவன்.

அபையர்-வீரர்.

அபேதம்-பேதமில்லாமை.

அபிதானம்-அலைத்துப் பூசுவன, மேல்வரும் பிறப்பு.

அபூபம்-அப்பம்.

அபிமானம்-உள்ளக்களிப்பு.

அம்பரம்-ஆகாயம், கூறை, கடல், திசை.

அம்புவில்-எலுமிச்சமரம்.

அம்பி-அம்மி, மாசு, அகலம், வெள்ளியம், மரக்கலம், நீர் மேலோடுவன வெல்லாந் தெப்பம்.

அம்பு-நீர் பாணம் மூங்கில், மிடா வாசை.

அம்மான்-அப்பன்.

அம்மை-முலை, தாய், அழகு, தனம், தேவதை, பத்திர காளி, கருத்து.

அம்பொதி - புட்டில், தற் கோலம், குடை, வேல்முள்.

அமைதி-மாட்சிமை.

அமைவு-மூங்கில், நிறைவு, காலம், பொருந்தல்.

அம்பணம்-மரக்கலம், துலாக் கோல், தூம்புவாய்.

அம்பகன்-எமன், கணமாலை.

அம்பல்-ஆம்பதிமொழி, சிலர றிந்து பகர்தல்.

அம்பம்-மதம், விழவு, நீர்வெளி, சேது, குதிரை.

அம்பல்-பழிமொழி, புறங் கூறல்.

அமரல்-மிகுதி, பொலிவு.

அம்மே-சாரியைச்சொல்.

அமுதம்-தண்ணீர்.

அமங்கலை-கலன்கழி மகளிர்.

அம்பணத்தி-துர்க்கை, துட்டி.

அம்-அழகு, நீர், சாரியைச்சொல்

அம்மா-அசைச்சொல், துக்கம், தாய்.

அம்பணவர்-ஒரு சாதி.
அம்மணம்-நிர்வாணம், தும்பு
அம்மியம்-கள்ளு, தெப்பம்.
அம்பி-தோணி, நாவாய்.
அம்பணம் - ஆசை, பற்றுக் கோடு.
அம்பிலி-வாச்சியம்.
அம்பலம்-இரதம்.
அமானம்-அளவிறந்தது.
அம்பிகை-பார்வதி.
அம்பாலிகை - அருகனை முடி தரித்தவள்.
அம்போதி-கடல்.
அம்புலி-சந்திரன்.
அம்மனை-மாதா.
அம்புராசி-கடல்.
அமலம்-அழுக்கின்மை.
அமரர்-தேவர்.
அமரர்-சத்துருக்கள்.
அமர்-பூசல், ஒப்பு.
அமருதல்-பொருந்துதல்.
அமைதல் - சம்மதித்தல், நிறைதல், மாட்சி.
அமைச்சன்-வியாழம்.
அமண்டலம்-செண்டு, வெளி.
அமரி-துர்க்கை, அமுதம்.
அயினி-சோறு.
அயின்ருள்-தாய்.
அமிழ்து-மழை, பழனம், அமுதம்.
அமாத்தியர்-மந்திரிகள்.
அம்மெனை-பாட்டே ஆடற்கேற்பன.
அம்மெனல்-அனுகரண ஓசை.
அமுதகிரணன்-சந்திரன்.
அமுதாசனர்-தேவர்.
அமுதர்-தேவர்கள்.
அமையம்-பகற்பொழுது.
அம்மம்-முலை.
அமுதவல்லி-சீந்தில் தண்டு.

அம்புயம்-தாமரை.
அம்போருகம்-தாமரை.
அம்புதம்-தாமரை.
அம்பருலகு-தேவலோகம்.
அமளி-துயிலிடம்.
அமலை-சோறுமிகுதி, பெருஞ் சோற்றுக்கட்டி.
அமுது-தெய்வ உணவு.
அமுதம்-இனிமை.
அமுதம்-சுதைநீர்.
அமோகர்-சித்திரக்காரர்.
அமுகர்-இடையர்.
அயர்வு-வேட்கை, பெருக்கம், வருத்தம், அகலம், மயக்கம், அச்சம், அறிவிலோர்கள், உயர்திணை, கிடக்கைத் தலம்.
அயன் - பிரமன், அருகன், சோமன்.
அயமாருத-இரும்பு, நாடகம், ஆண்டிற்பாதி, வாழி.
அயவாகனன்-அங்கி.
அய்யர்-துறவோர், அமரர், தேவர், பிராமணன்.
அய்யன்-சாத்தன், பிதா, மூத்தோர்.
அயிராணி-பார்வதி, இந்திராணி.
அயிர்ப்பு-குறிஞ்சியாழ்.
அயிர்-நுண்மணல், நுண்மை, கண்டஞ்சர்க்கரை.
அயனம்-வியாபாரித்தல்.
அயிறல்-பக்கித்தல், பருகல்.
அயிற்றல்-சந்தேகித்தல்.
அயில்-வேல், கூர்மை, அழகு, கண்.
அயிலான்-சுப்பிரமணியன்.
அயர்-வருத்தம் தீர்தல், துன்பம், மயக்கம் செய்தல்.

அயில்-உழவர், வீரர்.
அயனம்-வழி, ஆண்டிற்பாதி.
அயினி-சோறு.
அயின்றல்-பக்கித்தல்.
அயலவர்-அயலோர்.
அயோத்தி-நகர்சாகேவிர மென்று பெயர்.
அரசிருப்பிடம்-அத்தாணி, அரசன் தேவி இருப்பிடம், கந்தவாரம்.
அரக்காம்பல்-செங்குமுதம்.
அரன்-சிவன், எல்லாமுடையோன்.
அரத்தன்-செவ்வாய்.
அரல்-விரித்தல், மணல்.
அரங்கல்-அழுங்குதல்.
அரத்தம்-செங்கழுநீர், பவளம்.
அரக்கு-சிவப்பு, இரத்தம், கடம்பு.
அரலை-கழலை, புல்வாய், அருங்கனிக்காழ்.
அரவு-வசை, பாம்பு, ஒன்று, ஆயிலியம்.
அரக்கு-உதிரம், பொன், மெழுகு.
அரக்குதல்-கீழ்தல்.
அரம்பை-வாழை, தெய்வமகளிர்.
அரணம்-செருப்பு, கத்தளம், இல்லாமை, பூசல், திரன், காடு, கவசம், மதிள்வேலி.
அரவம்-ஒலி, பாம்பு, நெல்லி, குங்கலியம். அரசர்க்கு நட்பாளர், பிராமணர், நூபுரம், படைத்தொழிலார், ஐம்பெருஞ்சுற்றம், மருத்துவர், சோதிடர்.
அரசு-மரம், இராசர்.
அரசாறு-தொழில், ஓதல், வேட்டல், ஈதல், பார்புரத்தல், உயிரோம்பல், படைக்கலங் கற்றல்.
அரசன்-வியாழன், இராசர், எல்லாம் உடையோன்.
அரசியல்-படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்ஆறே.
அரதனம்-தெய்வப்பெண், மணிப்பொதுப் பேர்.
அரசற்கைம்பெருங்குழு-மந்திரி, புரோகிதன், சேனாபதி, தூதர், சாரணர்.
அரசற்கெண்பேராயம்-கருமவிதிகாரர், படைத்தலைவர், மந்திரி, சுற்றம், யானைவீரர் கடைகாப்பாளர், இவுளி மறவர், நகரமாக்கள்.
அராகம்-கோபம், யாழ், கலிப்பா, சிவப்பு.
அரணியம்-காடு.
அரமகளிர்-தெய்வப்பெண்.
அரணி-தீக்கடைக் கோல்.
அரண்-கோட்டை, செறிவு, காவல்.
அரம்-பாதாளம், இரும்புக் கருவி, வெள்ளைநிறம்.
அரணித்தல்-அலங்கரித்தல்.
அரவிந்தம்-தாமரை.
அரசுநிழலிருந்தோன்-புத்தக் கடவுள்.
அரந்தை-துறக்கம், பிரகாசம்.
அரற்றல்-கலித்தல்.
அரட்டர்-கடிகை, குறுநில மன்னர்.
அரங்கு-நாகு, இடம்.
அரமியம்-நிலாமுற்றம்.
அரவன்-சிவன்.

அரங்கம்- ஆற்றிடைக் குறை, ஆயுதம், சூது, கூத்துப் பயிலிடம்.
அரி - நாராயணன், பொன். பகை, கண்ணில் வரி, தெப்பம், விசிப்பு, காற்று, வரி, நெருப்பு, குதிரை, கடல், பொன்மை நிறம், தண்ணீர், இந்திரன், அண்டம். அசோகு, வயிரமரம், வயிரம், விரை, ஈர்வாள், கூற்றுவன், புகை, கட்டில், மரகதமணி, சிங்கராசி, சிங்கம், பாம்பு, வண்டு, இருசுடர், சிலம்பிற்பெய்தபரல், குரங்கு, கூர்மை, கோ, புகர், வலி, பூமி, இராசா, கற்பகத் தரு, அம்பு, திக்கு, சுவர்க்கம், நெற்கதிர், மூங்கில், சோலை, படைக்கலம், சக்கரம், அரிசி, எறிபறை, காந்தி, ஐமை, வரை, ஆ. 57.
அரிசம்-மிளகு, கோபம், குரல், கழல்.
அரில்-பிணக்கம், குற்றம், சிறுதூறு, சீதளம், தெறிவு, பெருமை.
அரிதம்-திக்கு, பொன்னிறம், பச்சை நிறம்.
அரிகை-அறுகை.
அரிதல்-அறுத்தல்.
அரியது-இல்லாதது.
அரியகம் சிலம்பு.
அரிகள்-சத்துருக்கள்.
அரிவாள்-கொடுவாள்.
அரிமை-மான்.
அரியல்-கள்ளு.
அரிசனம் மஞ்சள்.

அரை-இடை, பாதி.
அரோ-அசைச்சொல்.
அரைநாள்-பாதிநாள்.
அரீணம்-மான்.
அரியணைச் செல்வன் - புத்தக் கடவுள்.
அரிதகி-கடுக்காய்.
அரைங்கம்-அழகு, நோய், மாதா, தெய்வம், ஆகாரம்.
அரிட்டம்-காக்கை, கள்ளு.
அரிசி-தண்டுலம், உரிய மரம்.
அரியம்-சோம்பு.
அருந்தவர்-ஆழ்வார்கள், அகத்தியன்.
அருள்-கிருபை, அன்பு, இராகம், கொடை.
அருணம்-சிவப்பு, பொன்மான், ஆடல், அச்சம், ஆடு, எலுமிச்சைமரம், கவசம்.
அருப்பம்-ஊர், மருதநிலத்தூர், கவலை. பிட்டு, இடும்பை, கனமுரம்பு, வழுக்கல்நிலம், செலவரியது, மோர்.
அருக்கன்-ஆதித்தன், தேனீ, அங்கல், சுருங்கல், கார்தல்.
அருச்சுனம்-மருது, வெள்ளை நிறம், அருத்தபதாகை, வேதப்பொருள்.
அருத்தம்-தனம், பொருள், பயன், பாதி.
அருவி-தினைத்தாள், மலைச்சாரலிறுறு, கழிமுகத்துவாரம்.
அருவை-துர்க்கை, பெண்.
அருந்தல்-உண்டல்.
அருனல்-கொடை.
அருணன்-ஆதித்தன், ஆதித்தன் தேர்ப்பாகன், புதன், தூதுவன்.
அருடம்-வேம்பு, கள்ளு.

அருகனை முடிதரித்தோள்-தன்ம தேவதை.

அருஞ்சிறை-நரகம், மதில்.

அருச்சனை-பூசனை.

அரும்பல்-முளைத்தல்.

அருச்சிகன்-சந்திரன்.

அருமர்-தமிழர்.

அருந்ததி-வடமீன்.

அருகர்-சமணர்.

அருமை-பெருமை, பேராண்மை.

அருமையிற்பாடல்-அகமார்க்கம்.

அருலம்-காற்று.

அரும்பு-மொட்டு.

அருகல்-குறைதல், சார்தல்.

அருக்கம்-எருக்கிலை.

அருட்பம்-மிகுதி.

அருகி-கள்ளு.

அரும்பாலை-பாலைநிலத்தியாழ்.

அருமலதி-இராகம்.

அருட்கொடி வேந்தன்- அருகக் கடவுள்.

அருகந்துதன்-வேதனை செய்வோன்.

அரும்பலம்-அனிச்சம்.

அருத்தி-ஆசை.

அலகு-பால், நெல்லின் மணி, எண், பலகறை, நுளம்பு ஆதி, பறவைகளின் மூக்கு, ஆயுதம்.

அலந்தை-நிரை, துன்பம், குளம்.

அலற்றல்-பொறுதியின்றிக் கூப்பிடல்.

அலமரல்-சுழற்றல், அச்சம், (அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி. தொல்.)

அல்லி-வெள்ளாம்பல், மான், கூத்து, பூவின் அகஇதழ், காயாமரம்.

அல்லோன்-சந்திரன்.

அல்-கலப்பை, கூர்மை, ஆதித்தன். இருள், இராத்திரி, இடைச்சொல்.

அல்லல் – தங்கல், நாள், நெல், துன்பம்.

அலர்-சந்திரன்; பலர் தூற்றுதல், மலர், தண்ணீர், பழிமொழி.

அலவன்–நண்டு, கற்கடகவிராசி, ஆண்நண்டு, சந்திரன், பூனை.

அலங்கல்-தளிர், மாலை, ஒளிவிடுதல், அசைதல்.

அல்கல்-வறுமை, தங்கல், சுருங்கல்.

அலை–நீர்த்திரை, கடல், வெகுளி.

அலைசல்-அலையல்.

அல்லாத்தல்-துன்பம்.

அலம்பல்-ஒலித்தல்.

அலத்தகம்-செம்பஞ்சு.

அலர்-பூ, சுரைப்பூடு.

அலம்– அமையுமென்றல், கலப்பை, இடைச்சொல், துன்பம்.

அலர்தல்-விரிதல்.

அல்லியம்-மாயனுடல்.

அலகைக்கொடியாள்-துர்க்கை, பத்திரகாளி.

அலகை-பேய், நாள்.

அல்குல்-சகனம்.

அலங்கரித்தல்-ஒப்பனைசெய்தல்.

அலாயுதன்-பலபத்திர ராமன் (பலராமர்).

அலி-பேடி, கொற்றும்பூடு.

அல்லம்-இஞ்சிப்பூடு.
அலங்காரம்-கட்டழகு
அலக்கண்-துக்கம்.
அலகண்டம்-துக்கம்.
அலவலை-புகழ்தல்.
அலவல்-நீர்நிலை, பள்ளம், கிழக்கு.
அவனி-பூமி.
அவைநீர்-வழியினதுமுறைமை, சாரியைச்சொல், சுட்டு.
அவா-விருப்பம், காடி, கஞ்சி, வேட்கைப் பெருக்கம், இரங்குதல்.
அவரோகம்-மறித்துவஞ்சல்.
அவனறல்-சாவு.
அவரை-துவரை, படர்பயிர்.
அவ்வழி-முழுதுமறியும் என்பது.
அவதாது-வெள்ளைநிறம்.
அவ்வை-மாதர், வாமனன், நெறி, வாழாது நோற்பவள்.
அவ்வியம்-மனக்கோட்டம்.
அவி-சோறு, நெருப்பு, தெய்வ உணவு, நெய்.
அவிர்-பாடஞ்செய்தல், ஒளி.
அவிர்தல்-ஒளிவிடுதல், விறல்.
அவிழ்தல்-மலர்தல்.
அவை - சபை, அறிஞர்திரள், போர்-வட்டாடு, ஆடி.
அவித்தை-மாயை.
அவையல்-திரளை.
அவைத்தல்-நெல் குத்துதல்.
அவலம்-துக்கம்.
அவையம்-உறுப்பு.
அவிநவம்-புதுமை.
அவுணர்-தகுவர், திதிபுத்திரர்.
அவிநயர்-கூத்தர்.
அவிரளம்-பெருகல்.
அவதி-அளவு.
அவற்று-உவமை
அவலித்தல்-துன்பம்.
அழனம்-உஷ்ணம்.
அழத்தல்-அளவு.
அழம்-பிணம், பேய், தீ.
அழகில்-கழுதை.
அழகு-முழுவு, ஒண்மை.
அழல்-செவ்வாய், அக்கினி, வெப்பம், உஷ்ணம்.
அளகைக்கோன்-குபேரன்.
அழலவன்-ஆதித்தன்-
அழற்கண்வந்தோன்- வீரபத்திரன்.
அழியும்-ஒட்டகம்.
அழிவை-ஆணை.
அழிஞ்சில்-மரம், ஒட்டினர் மேற்சாராமை.
அழும்பு-சுவர்க்கம், சோறு.
அழுவு-நடுவு.
அழுகு-பெருமரம்.
அழுக்கு-ஆசை, குற்றம்.
அழுக்கல்-அச்சம்.
அழுங்கல்-இரங்கல், கேடு. சோம்பு, கோறல், அச்சம், ஒலி, துன்பம், ஆரவாரம், அழுந்து, ஆழநீர்.
அழுவம்-துருக்கம், வழுக்கு நிலம், பரப்பு, நாடு. பெருமை, தயிர்.
அழுக்காறு-பொறாமை.
அழுகு-அஃறிணைப்பேடை.
அளகம்-பெண்மயிர், மற்றவர், குருளை, நீர், மயிற்குழற்சி.
அளக்கர்-கடல், சேறு, கார்த்திகை நாள், பூமி, ஆழம்.
அளவர்-உப்பமைப்போர்கள்.
அள்ளல்-பிடித்தல். நரகம், சேறு.

அள்ளு-வில்லி, பற்றிரும்பு.
அள்-கூர்மை, செறிவு, வன்மை, பிடிக்க, கூலி, செறிவு.
அளறு-நரகம், சேறு.
அளவு-வரையறை, நயம், அளபெடை.
அளவை-தினம், எல்லை, அளவு.
அளவின்மை-அளவிறந்தது.
அளாவல்-கலத்தல், துழாவல்.
அளபெடை-எழுத்திசைசை.
அளிகம்-தண்ணீர், நெற்றி.
அளிந்தம்-கோட்டை, வாசற்றிண்ணைத்தலம்.
அளி-வண்டு, கிருபை, மது, கொடை, கீதம்.
அளித்தல்-கொடை, அன்பு, செறிதல்.
அளிதல்-கனிதல்.
அளிக்கை-கொடுத்தல்.
அளை-புற்று, தயிர், மோர்.
அற்புதம்-அதிசயம்.
அறிவின்மை-அசேதனம்.
அறிமடம்-அறிந்தும், அறியாததும்.
அற்சனை-பூசனை.
அறகல்-கிட்டுதல்.
அற்கம்-எருக்கிலை, சுருக்கம்.
அறல்-கருமணல், வளைவு, குழல், நீர்த்திரை, நீர், இருள், சிறிய தூறு, திருநாள்.
அற்பம்-நாய், சிறுமை.
அறப்புறம்-ஓதுப்பள்ளி.
அறன்கடை-பாவம்.
அற்பி-மலையின் சாரல்.
அற்குதல்-நிறைத்தல்.
அற்கம்-நீர்க்காக்கை, எருக்கிலை.
அற்காமை-நிலையாமை.
அறத்தைக்காப்போன் - சாத்தன்.

அற்கு-ஒருக்கு.
அறம்-நல்வினை.
அற்றம்-மறைவு, பொருள், சோர்வு, அவகாசம்.
அற்ற-இல்லாதது, அவாவின்மை.
அறநிலைப் பொருளாவது - நெறிவழிநின்று நெறியாலுழந்து பெறுவகைதானே.
அறநிலையறமாவது - வருணகாப்பறம் பிறழா நெறி நிலை பெறுதற் பெருளாற் பேணும் பெற்றி.
அறநிலையின்பமாவது - ஒத்த குலமு மொத்த செல்வமு மொத்த வாயுவு மத்தக வுடையது.
அற்றூர்-குறவர்.
அறவர்-துறந்தோர்.
அற்பசி-அச்சுவதி மாதம்.
அறவு-நடுத்தலம்.
அற்றே-சாரியைச் சொல்.
அறுவகைப் போக பூமி—ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம், இரணவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம்.
அறிஞன்-புதன்.
அறிஞர்-துறந்தோர்.
அறிவான்-புத்தக் கடவுள்.
அறிவர்-கண்ணுளர்.
அறிவழி-பெய்கள்ளு.
அறிவு-ஞானம், ஒண்மை, கொள்கை, ஆன்மா.
அறுசுவை-தித்தித்தல், புளித்தல், துவர்த்தல், கைத்தல், உவர்த்தல், கார்த்தல்.
அறுவகை யுலக நடை—அறநிலையறம், மறநிலையறம், அற

நிலைப்பொருள், மறநிலைப் பொருள், அறநிலையின்பம், மறநிலையின்பம்.
அறுவகை-அற்று விடுதல், ஆனை யாளி,
அறணடு-ஊஞ்சல்.
அறுகு-சிங்கம். ஆனை, புல், ஆனையாளி.
அறுபதம்-வண்டு, கையாந்த கரை,
அறுவகைச் சக்கரவர்த்திகள்-அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புரூரவா, சகரன், கார்த்த வீரியன்.
அறுவை-புடவை, சித்திரை நாள்.
அறுத்தல்-அரிதல்.
அறுதொழிலோர்-பார்ப்பார்.
அறுமீன்-கார்த்திகை.
அறுவாய்-கார்த்திகை நாள்.
அறுசலம்-வீணை.
அறுசமயம்-வைசேடிகம், நையாயிகம், மீமாங்கியம், ஆருகதம், பவுத்தம், உலோகாயதம்.
அறை-பாறை, பறை ஒலித்தல், வார்த்தைகெடுத்தல், புரை போகல், செவி அறைதல், சொல்லுதல், அடித்தல், திரை, முறைஞ்சுட் போகல்.
அறைகூவல்-பொரவழைத்தல்.
அறைபோதல் - கீழறுத்தல், படையற்ற பேர்.
அறுபத்து நாலு கலையாவது-வேதம் 4, இந்திரகாசம், வேதார்த்தம், கற்பம், சந்தசு, சோதிடம், தர்க்கம்10, பாட்டம், பிரபாகரம், மீமாங்கிசம், மன்னுவாதி தருமசாத்திரம், வைசேஷிகம், சமையல் சாத்திரம், பாசுவதனம்,கடக-தனு 20, கணிதம், கந்தருவம், அத்த கேவுசல்லியம், அசுவா ரோகணம், கசாரோகணம், ஆகாசகமனம், பரகாயப் பிரவேசம், அக்கினித்தம்பம், வாயுத்தம்பம், கடகத் தம்பம் 30. ஜலத்தம்பம், ஆயுள்வேதம், தனுர் வேதம், ஸ்திரீ வசியம், புருஷவசியம், இரத்தின பரீட்சை, கனகபரீட்சை, சித்திரகனம், பரிசேதனம், வீணை-40. வேணு, தண்டி, காவல், சகுனம், சாமுத் திரிகா லட்சணம், பாஷா பரிக்கிஞானம், இந்திர சாலம், பூதசாலம், மகேந் திரசாலம் 55. தந்திர விசயம், மாயாவாதம், கிரியா வாதம், நட்டாமுட்டி, சிந்தனம், உச்சாடனம், நீதிசாத்திரம், மந்திரசாத் திரம், சந்திர சாத்திரம், காம சாத்திரம், கரவட சாத்திரம், சிற்பசாத்திரம், ஆகம சாத்திரம்-ஆக 64.
அறுவகைக் குணம் - ஞானம், சக்தி, செல்வம், வீரம், பலம், அழகு.
அனல்-நெருப்பு.
அனந்தன் - சேடன், மால், சிவன், பலபத்திரராமன்.
அருகன்-இளையபெருமாள், இராமாநுசன், திருப்புளியாழ் வார்.

அனந்தம்-மயிற்சிகை, அள விறந்தது, ஆகாயம்.
அனலன்-வெள்ளி, பகவான்.
அனங்கன்-காமன்.
அனந்தலோசனன் - புத்தக் கடவுள்.
அனங்கம்-மல்லிகை.
அனந்தல்-நித்திரை.
அனந்தஞானி - புத்தக் கடவுள், பிரமன்.
அன்னம்-சோறு, ஓதிமம், குருகு, கவரிமான்.
அனலேறு-இடி.
அன்னியம்-வேறுபடுதல்.
அனமி-பால்.
அனலி-ஆதித்தன்.
அன்றலை-வாடை.
அன்னியம்-குயில்.
அன்று-முன்னாள், அல்ல என்பது, தேற்றம், ஆகும், சொல்லும்.
அன்னை-தாய்.
அன்பன்-பத்தா, தோழன்.
அன்னவம்-கடல்.
அன்றில்-ஓணம், பட்சி, மூல நாள், ஓர்புள்ளு.
அன்பு-பரிவு.
அன்-சாரியைச் சொல்.
அன்னோ-அதிசயமுற்றிரங்கல்.
அன்ன-உவமை.
அன்னே-சாரியைச் சொல்.
அனிச்சம்-அரும்பல்மரம், அனிச்சப்பூ.
அனித்தம் - சந்தனம், நிலையாமை.
அனத்தம்-பொருளில்லாமை.
அனிலம்-காற்று.
அனிகம்-திரள், படை.
அனிச்சை-.....வுதல், நாகமல்லி.
அனுக்குகம்-......தனம், பாம்பு.
அனுதி-பழமை.
அனுமானம்-ஐயம்.
அனுக்கம்-வருத்தம்.
அனுமயன்-புத்தக் கடவுள்.
அனுலோமன்-உயர்ந்த நாலு வங்கிசத்து விதிமுறை விட்டுப் பிறந்த பிள்ளையின் பேர்.
அனுசன்-பின்பிறந்தோன்.
அனைத்து-முழுதும்.
அனைய-உவமை.
'அனு' என்று கன்னத்தின் கீழ் வாய் நாடி 'அனுமான்' என்று பேருண்டானது, கீழ்வாய் நாடியிலே வச்சிராயுதமிட்டு இந்திரனெறிகையால் அனுமானென்று பேராயிற்று.
அனுமிகை- ... ..
அனுச்சிலன்- பிரகாசமில்லான்.

அகரம் முற்றும்

இகரம்

இகத்தல்-கடத்தல், இறத்தல்.
இகணி-கருந்தினை.
இகரம்-சந்தனம்.
இகலினார்-சத்துரு.
இகல்-நரி, ஓரி, ஆதித்தன், சிவல், பகை, வலி, போர்.
இகந்து-கடந்து.
இகழ்வு-இகழ்ச்சி.
இக்கிரி-பறவையிலொன்று.
இகட்சி-மறப்பு.
இக்கே-சாரியைச் சொல்.
இகமில்-ஆண்டு.
இக்க-உவமை.
இகுகரை-இடிகரை.
இகுத்தல் - நெருக்கம், தாழ்த்தல், செகுத்தல், அழைத்தல், இழைத்தல், புடைத்தல், கொடை, சொரிதல், வீழ்த்தல், விரித்தல்.
இகுளை-தோழி, நட்பு, சுற்றம்.
இகுளி-இடம்.
இகுதல்-செகுத்தல், வீழ்தல்.
இகும்பை-குடம்.
இக்குக்கு-அணியம்புக்கட்டு.
இக்கு-கரும்பு, கள்ளு, இடைச் சொல்.
இகுசம் - எலுமிச்சமரம்.
இகம்-முன்னிலையசைச் சொல், அசைச் சொல், இப்பிறப்பு.
இங்கல்-தங்கல், செறிவு.
இங்கிதம்-கருத்தின் குறிப்பு.
இங்கு-பெருங்காயம்.
இங்குலிகம்-சாதிலிங்கம்.
இங்குதல்-தங்கல்.
இங்கூவு - காமசுண்ணம், தருப்பணபிண்டி.
இசுமை-குடம்.
இசைத்தல்-ஒலித்தல், சொல்லுதல்.
இசை - பண், பொருந்துதல், தித்திப்பு, ஓசை, புகழ், பாட்டின்சொல்.
இசைப்பு-இசைச் சொல்லு.
இச்சை-ஆசை, பொய்த்தல்.
இடித்தல்-அஞ்ஞானம்.
இசையை-துர்க்கை.
இசங்கு-குண்டிலி எனும் மரம்.
இசித்தல்-முறித்தல்.
இஞ்சி-கோட்டை, இஞ்சிப்பூடு.
இஞ்சினம் - முன்னிலையசைச் சொல்.
இடவகை-வீடு.
இடம்பாடு-பரிவு.
இடிதல்-அறுத்தல்.
இடங்கர் - குடம், நீர்ச்சால், முதலை, தூர்த்தர்,
இடிஞ்சில்-தீபமேற்றுந் தகளி.
இடவை-வழி.
இடங்கணி-கற்பொறி.
இடங்கழி-மீதூரல், தூர்த்தர்.
இடம்புரி-சங்கு.
இடக்கர் - மறைத்துமொழிதல், கும்பம்.
இடகம் - இடாகினி, வஞ்சப் பெண், பனுவல்.
இடம்-வீடு, வழி, இடவகை, செல்வம், விசாலம்.
இடத்தல்-ஒலித்தல்.
இடபம் - எருது, மரத்தின் கொப்பு.
இடர்-துன்பம்.
இடாகினி-யோகினி.
இடல்-கொடை.
இடி-உறுதிச் சொல், இடிப்

பெயர், நென்மா, ஆந்தை, ஒலி.
இடும்பல் - அச்சம், இம்பர், இராக்கதர்.
இடும்பை-துன்பம்.
இடுக்கண்-துன்பம்.
இடையல்-நல்லாடை.
இடையர்-ஆயர்.
இடை - தனிமை, நடுத்தலம், நுசுப்பு, நிறை இடம்.
இடும்பிகொழுநன்-வீமசேனன்.
இட்டிமை-அற்பம்.
இட்டி-வேள்வி, அற்பம்
இடுதல்-எறிதல்.
இணங்கி-பாங்கி.
இணர்-பூங்கொத்து.
இணம்-நெய், கொழுப்பு.
இணக்கு-தோழி.
இண்டு-ஈங்கர்.
இண்டர் - முல்லைநிலமக்கள், ஆயர்.
இணை - இரண்டு, புணர்வு, உவமை, சகாயம், இரக்கம்.
இணையி-ஒதிப்பணிச்சை.
இண்டை-தாமரை.
இண்டமரம்-மாலை.
இணறு-தூறு.
இதியாசம்-இலக்கிய மெழுத்து தாரணப்பொருள்நடை.
இதல்-சிவற்குருவி.
இதழி-கொன்றை.
இதணம்-பரண்.
இதழ்-பூவின்தோடு, பனையிதழ், அதரம்.
இதரர்-கீழ்மக்கள்.
இதலை-கொப்பூழ்.
இதி-மெய்க்குறுதி.
இதையம்-மனம்.
இதை-மரக்கலப்பாய், புதுப் புனல், கலப்பை, மரக்கால், காராமணிப்பயறு.
இதைப்புனம்-புதியகொல்லை.
இந்தி-பூசை.
இந்திரை-திரு,
இந்திரன்-மகசிரம்.
இந்திரனாள்-கேட்டை.
இந்தளம்-தூபதத்தட்டு, இராகம், எரியிடுகலன்.
இந்தனம்-விறகு.
இந்திரைக்கு மூத்தாள்-மூதேவி
இந்துருணி-புளி.
இந்து - சந்திரன், காடி, கரி, ஆனை.
இந்தீவரம்-கருங்குவளை.
இந்துளம்-கடம்புமரம், கடம்பு.
இந்திரவானம்-குவளை.
இப்பர்-செட்டிகள்.
இபம்-மரக்கோடு, ஆனை, பாகு.
இபுடிகரம்-எலி.
இமிழ்த்தல்-கட்டுதல், ஒலி.
இமிழ்-ஓசையினிமை.
இமிழ்தல்-தெவிட்டல்.
இமில்-எருத்தின் முதுகு, திரட்சி, எருது.
இமிர்தல்-நெருங்குதல்.
இமம்-பனி, பரிவேடம்.
இமை-கண், கரடி, மயில்.
இமையில்-கருடன்.
இமைத்தல்-விட்டுவிளங்கல்.
இம்மை-இப்பிறவி.
இம்பர்-இவண்.
இம்-இடைச்சொல்
இம்பி-பொன், புலம், நுண்மை.
இம்மெனல்-அனுகரண ஓசை.
இளம்பிடி-பெண்.
இமையவல்லி-உமையாள்.
இயக்கம்-பெருமை, காற்று.
இயக்கன்-நாய், இயக்கர்சாதி.

இயங்கல்-போகல்.
இயவுள்-பிள்ளை, நிருவாணி
இயவு-வழி.
இயம்-வாச்சியம், ஈயம், ஒலி, வார்த்தை.
இயவனர்-யோனகர்.
இயமான்-ஆன்மா
இயவர்-பறையர், தோற்கருவி இசைக்கும் பெயர்.
இயங்கல்-நடத்தல்.
இயலல்-திரிதல்.
இயல்பு-சாயல்,ஒழுக்கம், அழகு, குணம்.
இயக்கர்கோன்-குபேரன்.
இயை-புணர்ச்சி.
இயத்தல்-கடத்தல், தொடுத்தல்
இயற்றல்-முயற்சி.
இய்யே-சுட்டு.
இயம்பல்-சொல்லுதல், ஓசை.
இயா-முன்னிலையசைச் சொல்.
இயக்கி-அருகனை முடி தரித்தோள்.
இயக்குரோதம் - ஆலமரம், ...நாண், இனிமை, கடைக்கொள்ளி,
இரக்கன்-ஈரங்கொல்லி.
இரைத்தல்-ஒலித்தல்.
இரப்பு-வறுமை.
இரச்சை-கயிறு.
இரசனி-இராத்திரி.
இரந்திரி-இத்திமரம்.
இரசதம்-வெள்ளி.
இரதம்-பொன், தேர், பெரும் பாம்பு.
இரதனம்-கிண்கிணி, அரை நாண்.
இரதிபதி-காமன்.
இரத்தி-இலந்தை, மருது.
இரத்தம்-உதிரம்.

இரற்றல்-ஒலித்தல்.
இரசகம்-கருணை, துன்பம், ஒலி.
இரவலர்-இரப்போர்.
இரவு-இரத்தல், இராத்திரி.
இரவோர்- இரப்பவர்.
இரிதல்-காய்தல், ஓடல்.
இரலை-மானேறு, புல்வாய், ஊதுகொம்பு, அச்சுவதி, இரண்டு மிருகத்திணுண்பால்.
இரல்-ஏரல்.
இராசிவம்-தாமரை.
இரணி-பன்றி.
இரங்கல்-ஒலி, அழுங்கல்.
இரணம்-பூசல். கடல், பொன், பாம்பு.
இரணியம்-பொன்.
இரணியகர்ப்பன்-பிரமா.
இரட்டம்-தேசம், கழுதை.
இரையம்-பலபண்டம்.
இரை-விலங்குணவு, ஒலி.
இராவணம்-விளக்கு.
இராசிலம்-சாரைப்பாம்பு.
இராவதம்-பிறவு, இரேணு, பரிமளம், மலர்த்தூள்.
இராகம்-கீதம், செம்மை, இசை, நிறம்.
இராதம்-கடைக் கொள்ளி.
இராசமாக்கு-மலைப்பாம்பு.
இரவரவு-வசைபாடுதல்.
இராசியம்-மறைவு, யோனி.
இராசி-திரள்.
இராமம்-ஆசை, அழகு.
இரிஞர்-சத்துரு.
இரவி-ஆதித்தன், மலை.
இரேபதி-வாணிகம்.
இரிதல்-பிறகிடல்.
இரவோன்-சந்திரன்.
இராக்கதிர்-சந்திரன்.

இரதி-இந்திராணி, ஆனை மதம், பித்தனை, ஆசை, மதன் தேவி, வேட்கைப் பெருக்கம்.

இரட்டை-மிதுனம், இரண்டு.

இரண்டாம் வேதம் - தயித்திரியம், எசுர்.

இராமக்கிரியை-இராகம்

இராசதகுணம்-தானம், தவம், தருமம்பேணல், ஞானம், கல்வி, நலனிவைதெரிதல்.

இரேவதி - பலபத்திரராமன் மனைவி, கடைநாள்.

இருள்-இருட்டு, ஆனை கனைத்தல், நீலநிறம், அரவம், நரகம், மயக்கம், கருமை

இருசு - வண்டியுளிரும்பு, செவ்வை.

இருள் வலி-ஆதித்தன்.

இருணம்-உவர்நிலம்.

இருப்பை-பாம்பு, ஒருமரம்.

இருங்குடி -கொடைக் கீர்த்தி, மானியம், பாலை.

இருணிலம்-நரகம்

இருத்தி-செல்வம்

இருவி-தாள்வு, தினைத்தாள்.

இருளி-பன்றி.

இருடி-ஆந்தை, முனி.

இரும்பாழி-ஊர்.

இருக்கு-முதல்வேதம், வேதப் பொதுப் பெயர்.

இருந்தை-கரி.

இருமை-பெருமை, இம்மை, மறுமை.

இருந்துரு-பெருச்சாளி

இருவகைக் கந்தம் - நற்கந்தம், துர்க்கந்தம்.

இருபாற்பொருள் - வேதம் கல்வி, செல்வப்பொருள்.

இருவகையறம்-இல்லறம், துறவறம்.

இருவினை-நல்வினை, தீவினை.

இருவகைத்தோற்றம்-சராசரம்.

இருசுடர்-சந்திர சூரியர்.

இருமரபு-தாய்வழி, தந்தைவழி.

இருவகையின்பம் - இல்லதும், உள்ளதும்.

இருவகை வீடு - பற்றுவீடு, பொருள்வீடு.

இருநிதிக்கிழவன்-குபேரன்.

இருநிதி-சங்கநிதி, பதுமநிதி.

இலம்பகம் - நுதலிலணிமாலை, அத்தியாயம், நூன்முடி.

இலம்பாடு-துக்கம், வறுமை.

இலஞ்சி-மகிழமரம், கொப்பூழ், அகில், புன்கு, வாவி, கோட்டை.

இலஞ்சம்-கொப்பூழ்.

இலச்சை-மானிபம், (வெட்கம்).

இலங்கை - ஆற்றிடைக்குறை, அளகை, இலவம்பஞ்சு, பூளை.

இலங்கிகள்-துறந்தோர், தவத்தியர்.

இலங்கல் - அழுங்கல், அழுங்குதல்.

இலிங்கம்-ஆண்குறி, அடையாளம்.

இலிர்த்தம்-தளிர்த்தல்.

இலதை-கோற்கொடி, வள்ளிக்கொடி.

இலச்சினை-மோதிரம்.

இலத்தை-கிருபை.

இலகு - அகில், எழுத்து, நொய்ம்மை, ஒளி.

இலக்கியம்-உதாரணமெடுத்துக்காட்டுவது.

இலவந்திகை-இயந்திரவாவி.

இலட்டுகம் - தோசை, பணியாரம்.
இலட்டு-அப்பம்.
இலாங்கலி-தென்னமரம், செங்காந்தள்.
இலாளி-குதிரைவாய்நீர்.
இலாடு-குதிரை.
இலாயம்-குதிரைப்பந்தி.
இலாடம்-நெற்றி.
இல்லாள் - பாரியை, மருதத்தலைவி, முல்லைத் தலைவி.
இல்லவள்-மனையாள்.
இலக்கர்-துகில்.
இலக்கம்-இருப்பிடம், வளரொளி, தொகை.
இலையுதிர்-முதுகாடு.
இலை-மரத்திலை, தகடு.
இலையம் - கூத்து, பேயம்வாழை, கூத்தின்விகற்பம்
இலேகர்-தேவர்கள்.
இலேகை-எழுத்து.
இலேசம் - சிறுமை, காலவிரைவு.
இல் - வீடு, மனையாள், இல்லாமை, இடம், இராசி, சாவு, இடைச்சொல்.
இரவு-சாரியைச்சொல், புலி.
இல்லம்-தேற்றான்மரம், வீடு.
இல்லோன்-மிடியன்.
இலைக்கொடி-வெற்றிலை.
இலகடம்-ஆனைமேல் தவிசு.
இல்லல்-நடத்தல்.
இவர்தல்-செறிவு, விளங்குதல். விருப்பம், ஏறுதல், எழுச்சி, நடத்தல்.
இவற்றல்-சாதித்தல்.
இவவு-வழி, காடு, ஊர்.
இவறல் - ஆசை, ஆசைப்பெருக்கம், மறலி (மறதி).

இவண்-இம்பர்.
இவமை-குற்றம், ஆடு, கருமை, கொண்டல்.
இவுளி-குதிரை.
இவையே - வீற்றிருத்தல், ஐயுற்றசொல்.
இழிஞர்-சண்டாளர்.
இழிவு-[*].
இழா-இழுக்காமை.
இழுமை-மயக்கம்.
இழுதன்-பேதை, மூடன்.
இழுது-நெய், நிணம்
இழுமெனல்-இனிமை, அனுகரணவோசை.
இழுக்கல்-தளர்தல்.
இழித்தல்-ஒலித்தல்.
இழைத்தல்-ஆய்தல், மாற்றம், நினைத்தல், கூற்றம், செய்தல்.
இழவு-அழுகை.
இழை-நூல், ஆபரணப்பொதுப்பெயர், கூட்டம்.
இழிதல்-இறங்கல்.
இழுதை-அறிவிலோன்.
இளமை-தன்மை, காமம், மயக்கம், வாலிபம்.
இளவல்-பின்பிறந்தோன்.
இளம்பி-பெண்பேய்.
இளவு-தளர்ச்சி
இளக்கம்-இரக்கம்.
இளங்கோக்கள்-செட்டியார்
இளி-இசை, இசித்தலொன்றே, இணங்குதல், உரித்தல், சிரிப்பு, இகழ்ச்சி.
இளிவு-இழிதகவு.
இளைத்தல்-கட்டல்
இளை-பசு, பூமி, கிடங்கு, காவற்காடு, அங்காடி, புயல், தலைக்காவல், வேலி, இளமை.

இளையன்-தலைக்காவல்.
இறல்-ஏரல் (கிளிஞ்சல்).
இறங்கல்-குடம், ஆழங்கால்.
இறப்பு-இல்லினிறப்பு, சாவு, மிகுதி.
இறலி-இத்திமரம்.
இறவுளர்-குறவர்.
இறடி-கருந்தினை.
இறவை-ஏணி, இறைகூடை.
இறஞ்சல்-தெண்டன்.
இறை-கடமை, இராசா, சுவாமி, அற்பம், தாமரை மலர், தங்கல்.
இறவு-இருல்மீன்.
இறகு - மயிற்பீலி,
இறைமையாட்டி - தலைவி.
இறலி-மருதமரம்.
இறத்தல்-சாதல், நடத்தல்.
இற்புலி-பூனை.
இருல் - தேன்கூடு, தாமரை, இருட்டு, மீன், கார்த்திகை நாள், எருது, இடபராசி.
இறும்பு-காடு, தூறு, பரம்பு, மலை, இடை, சிறுமலை.
இறுங்கு-சோளம்.
இறும்பூது-குழைதகை கயை, சிறுதூறு, மலை, அதிசயம், காந்தட்பூ, தாமரை.
இறுத்தல்-தங்கல், சொல்லுதல், கெடு, தாழ்தல், முறித்தல், ஒசித்தல்.
இறுமாப்பு-ஏக்கழுத்தம்.
இறுக்கர்-பாலை நிலமாக்கள்.
இறப்பு-குடியிறை.
இறஞ்சி-மரவுரி.
இறை-முன்கை, கடவுள், சிறுமை, தாய்தகப்பன், புள்ளிறகு, சென்னி, விரைவு, விட்டில், தங்கல், உயர்ந்தோர், பிரமா, எல்லாமுடையோன்.
இறை-இறைவன்.
இறைவன்-இராசா, கடவுள், மூத்தோர், குறிஞ்சித் தலைவன்.
இறையுளர்-குறிஞ்சிநிலமக்கள்.
இறுதி-ஒடுக்கம்.
இனம்-மாணிக்கம், கொவ்வையங்கனி, கிளை, அமைச்சு.
இனன்-ஆதித்தன், உவமை.
இன்னல்-துன்பம்.
இன்னியர்-பாணர்.
இன்னியை-இனிமையாகிய வாச்சியம்.
இன்னிசைக்காரர்-பாணர்.
இன்றை-மலை.
இன்பம்-அகமகிழ்ச்சி, நயம்.
இன்று-இல்லை, ஆகும்.
இன்மை-வறுமை.
இனி - இவ்விடமிக்காலமென்னும் இடைச்சொல்.
இனிசு-சோறு.
இனிக [ம *]-படை.
இனிக்கு-எழுத்து.
இன்னார்-சத்துரு.
இனைதல்-இரங்குதல்.
இன்னுங்கு-துன்பம்.
இன்னே-சாரியைச்சொல்.
இன்-அஞ்சாம்வேற்றுமை, இனிமை.

இகரம் முற்றும்

உகரம்

உகளம்-இரண்டு.
உகமல்—பாய்தல்.
உகழுதல்-தாண்டல்.
உக்காரி-அப்பம்.
உகப்பு-மேடு.
உக்கிரன்-வீரபத்திரன்.
உகிர்-நகம்.
உகினி-புளி.
உக்கம்-ஆலவட்டம், ஆனேறு.
உக்கலை-மருங்கின் பக்கம்.
உகளை-புறமயிர்.
உக்கில்-வயிறு.
உக்கிரம்—கொடுமை.
உகுத்தல்-தாவல்.
உக்கி-கெடு.
உச்சம்-உயர்ச்சி, வல்லிசை.
உச்சி—சந்தி, தலை, மத்தியானப் பொழுது.
உச்சிட்டம்-எச்சில்.
உஞ்ஞை-காஞ்சிமரம்.
உஞற்று-முயற்சி, மனவெழுச்சி சோர்வுறு, வழு[க்]கு.
உஞ்சல்-பிழைத்தல், ஊஞ்சல்.
உடன்-அருக . . . ம்.
உடல்-மெய், பொருள்.
உடம்பிடி-வேலெனும் ஆயுதம்.
உடற்குறை-பேய்.
உடனில்—கோபம், பூசல்.
உடைதல்-சாய்தல்.
உடலுதல்-பூசல்.
உகல்-இலச்சை, அச்சம்.
உடம்பு-தேகம்.
உடைகுளம்-பூராடம்.
உடை - வேலமரம், துகில், குடை, செல்வம், காத்தல்.
உடும்பை-மரம்.
உடுப்பை-மரம்.
உடமிடுக்கு-அச்சம்.
உடு-கிடங்கு, பகழி, நட்சத்திரம், கோல், அம்பிலீர்க்கு, சிறகு[ண] அகழ் ஆடு, காய்.
உடுபதி-சந்திரன்.
உடுக்கை—தண்ணுமை, வாச்சியம்.
உணவை-கணக்கமரம்.
உணு-சோறு, பெ‌ாசிப்பு, தெய்வவுணவு.
உண்டி-அருந்தல், விலங்குணவு, சோறு.
உண்டல்-அருந்தல்.
உணராமை-மயக்கம்.
உணர்தல்-ஊடல்தீர்தல்.
உண்டாட்டு - மகளிர் விளையாட்டு.
உண்டை-படைஉறுப்பு, திரள், வடிவு, குளியம்.
உணர்வு - அறிவு, தெளிவு, நீங்கல், ஒளிதல்.
உவமை-இடையீடு.
உணவு-சோறு, பறவையூண்.
உணங்கல்-புழுங்கல்.
உண்மை-சத்தியம், உண்டாகப் பட்டது.
உத்தரி-கோணம், குதிரை.
உத்துங்கம்-உயர்ச்சி.
உதள்-வெள்ளாட்டேறு.
உதிரன்-செவ்வாய்.
உதாசனன்-அங்கி, கண்கொத்திப்பாம்பு.
உததி-சமுத்திரம்.
உத்தி - பாம்பின் படப்பொறி, செந்திருவுறுப்பு, சுணங்கு.
உதாரம்-கொடை.
உத்தியானம்-நந்தவனம்.

உத்தரம்-வடதிசை.
உதவல்-உதவி, கொடை.
உத்தரிகம்-ஏகாசம்,(மேலாடை)
உதைத்தல்-தூண்டல், மிதித்தல், அத்தது.
உத்தமாங்கம்-தலை.
உதிட்டிரன்-தன்மபுத்திரன்.
உதும்பரம்-செம்பு.
உதண்டம்-மொட்டம்பு.
உத்தியோகம்-முயற்சி.
உதகம்-நீர், மேகம்.
உதைப்பு-அத்தது.
உதரம்-வயிறு.
உதடு-அதரம், மேடராசி.
உதி-கல்வி, தோற்றம், மரம், துருத்தி.
உத்தமதானம்-குற்றமூன்றறுத்தோர்க்குள்ளம் உவந்தீவது.
உந்தி-தேர்த்தட்டு, கொப்பூழ், ஆற்றிடைக்குறை, யாழ்க்கண், ஆறு, தேருருள், நீர்ச்சுழி, சமுத்திரம்.
உபலம்-சிறுகல்.
உபநிடதம்-வேதத்தினுட்பொருளினுட்பம்.
உபாயம்-நல்வினையில் செலுத்தும் புத்தி.
உபதாரம்-தியாகம், சனம், ஆசைச்சொல்.
உபையம்-இரண்டு.
உப்பு-கடல், மெல்லியலாராடல், உவர், இனிமை.
உபாத்தி-ஆசாரியன்.
உபவனம்-ஊர்சூழ்சோலை.
உபதாகினி-படை.
உப்பிதம்-கூத்தின் விகற்பம், கிலேசம்.
உபலாளனம்-தூய்மை.
உம்பல்-வழித்தோன்றல், ஆனை, நற்குலன், எழுச்சி, உதவிசெய் தினத்தைக் காக்கும் யானை.
உம்மை-கழிந்தபிறப்பு.
உமிழல்-தெவிட்டல், கக்குதல்.
உமை-பார்வதி.
உமணர்-உப்பளவர்.
உம்மே-இடைச்சொல்,
உமைமகன்-வீரபத்திரன், கணபதி, சுப்பிரமணியன்.
உம்பர்-மேலிடம், தேவர், மேல்வருவது, உயர்ச்சி.
உம்பமல்-உள்ளின் மாசு.
உற்கம்-அனற்றிரள்.
உயர்வு-கருதல், துணை, வருத்தம், தீர்தல், உயர்ச்சி.
உயிர்ப்பு-காற்று.
உயிர்-காற்று, ஆன்மா.
உய்யானம்-நந்தவனம்.
உயுத்தம்-போர்.
உயர்நிலை-தெய்வலோகம்.
உயர்ச்சி-உயர்வு.
உயர்தல்-நீளம்.
உ............—பொலிவு.
உயங்கல்-வருத்தம்.
உயிர்த்தல்-வருத்தந்தீர்தல், விடுத்தல்.
உயர்த்தல்-பொதுவாய், விடல், செலுத்தல், அனல், சீதம், வாதம், அசனி, புனல், ஆயுதம், விடம், மருந்து, பசி, சாபம், பிணி, உணவருமை.
உயிர்நிலை-உடம்பு.
உரோகம்-நோய்.
உரோமம்-புறமயிர், செறிந்த மயிர்.
உரற்றல்-ஆரவாரம்.
உரப்பல்-சீறிச்சொல்லுதல்.

உரகம்-பாம்பு.
உரால்-பெருத்தகோபம்.
உரன்-அறிவு.
உரம்-மார்பு, வலி, அறிவு, உள்ளத்தின் மிகுதி.
உரவோர்-மூத்தோர்.
உரோதனம்-அழுங்கல்.
உரை-சொல், தேய்வு, பொன்றல்.
உரோசல்-போதல்.
உரிவை-தோல்.
உரியோன்-பத்தா, உரித்தோர்.
உரை-ஒலி, சொல்.
உரிமை-விதி.
உரைத்தல்-ஒலித்தல், உரிஞ்சல், போதல், தேய்த்தல்.
உரிப்பிரியை-இலட்சுமி.
உருப்பு-வெப்பு.
உருத்தல் - தோன்றல், பெருங்கோபம், முளைத்தல், மிகுதி.
உருளி-தேர்வண்டில்.
உருள்-சாடு, உரோகணி, தேர்வண்டில், சாடினுட்பண்டி.
உருங்கல்-அழிதல், கேடு.
உரும்-அச்சம்.
உருப்பம்-வெப்பம், உட்டணம்.
உருபு-வேற்றுமை.
உருமேறு-இடி.
உருமம்-உட்டணம்.
உரு-இடி, ஆடு, நிறம், அட்டை, இடபம்.
உருவாரம்-வெள்ளரிப்பூடு.
உருமை-மனையாள்.
உருபு-அச்சம்.
உருவம்-தேகம், வடிவம்.
உருத்திரபஞ்சமம்-இராகம்.
உருவகம் - விதைத்ததெல்லாம் உண்டாகப்பட்டதலம்.
உலவை - மரத்தின் கோடு, விலங்கின் கொம்பு, காற்று, மரத்தின் கொம்பு, ஓர்மரம்.
உலங்கு-கொசுகு.
உலருதல்-காய்தல்.
உலகு இறை-சுங்கம்.
உலதை-சிலந்தி.
உல்லல்-ஊடல்தீர்தல்.
உலண்டு-கோற்புழு.
உலப்பு-கெடுதல்.
உலகம்-திக்கு, புவனம், பூமி, உயர்ந்தோர், விசும்பு, உயர்குணம்.
உலம்-திரள்தல், துன்பம்.
உலத்தம்-சாதல்.
உலம்பல்-ஆரவாரம்.
உலக்கை-திருவோணம், ஒங்கல்.
உலோசனம்-கண்.
உலா-ஆணை, பிறபாரம், பவனி, அசைதல்.
உலாமரம்-பூவாது காய்க்கும் மரம்.
உலோகம்-பொன், வெள்ளி, செம்பு, தராம் (இரும்பு), ஈயம், வெண்கலம்.
உலோகிதம்-சிவந்தநிறம்.
உலூகம் - கோட்டான், குருவி, சிம்பி.
உல்லாபன் - கோயுற்றெழுந்தோன்.
உலைதல் - அச்சம், அழிதல், வேதனை.
உல்லியர்-கூவநூலோர்.
உல்லாபம்-குதலைச் சொல்.
உவணன்-கருடன்.
உவணம்-கருடன், உறுசிறைக்கழுகு.
உவரி-கடல்.
உவ . . . . . . சன . . . . ம்.
உவளகம்-குளம், குட்டை, ஆழநீர்.

உவணம்-உயர்ச்சி.
உவர்–கரம்பைமண்.
உவர்ப்பு-அவாவின்மை.
உவனி-வாள்.
உவனித்தல்-வாய்மை.
உவமை-கருத்து, ஒப்பு.
உவளல்-துவளல்.
உவ்வி-தலை.
உவறல்-காய்தல்.
உவா-ஆனை, கடல், இளையோன், அமாவாசை.
உவதி-தங்கி.
உவணை-தேவலோகம்.
உவதை-அருவி, சந்தோஷம்.
உவனி-வாள்.
உவ்வு-தவம், சுட்டு.
உழத்தல்-சிரமம்.
உழக்கல்-உழக்குதல்.
உழப்பு-முயற்சி, வலி.
உழத்தியர்-மருதநில மகளிர்.
உழிஞை-சிறுபூழை.
உழி-இடப்பெயர், பக்கம்.
உழிதரல்–திரிதல்.
உழுவல் - விதிப்படிவாரா நின்றது, தொடர்ந்த அன்பு.
உழையோர்-நூல்வல்லோர், அமைச்சர், வேலைசெய் வோர்.
உழவர்–சூத்திரர்.
உழை-இடம், ஆண்மயிர், புறமயிர், மான், எழுவகை, ஓசையிலோர் விகற்பம்.
உழுவை–புலி.
உழுபடை-கலப்பை.
உள்ளார்-சத்துருக்கள்.
உள்ளன்-நரி.
உளி-இடம்.
உள்ளுதல்-நினைத்தல்.
உள்-வீடு, இடவகை.
உளர்தல் - சிதறல், நட்டல், போரொலி.
உள்ளாளம்-கூத்துவிகற்பம்.
உளை–பரிமீது கட்டுமயிர், புறமயிர், ஓசை, ஆண்மயிர்.
உளம்-மனம்.
உள்ளியம்-கரடி.
உளு-எறும்பு, தவளை.
உளிஞை-சிறுபூளை.
உளியம்–கரடி.
உள்ளம்-கருத்து, நெஞ்சு.
உள்ளல் - கருத்து, உள்ளான் பேர் (உள்ளான்குருவி).
உளைத்தல்-அழைத்தல், ஓசை.
உறழ்தல்-செறிவு, வெருவல், பெருகல், ஒத்தல், பகைத்தல், உவமை.
உறழ்-இடையீடு, உணர்வு, ஒத்து, செறிவு, பகை, உவமை, ஒப்பு, காலம்.
உற்பலம்-செங்கழுநீர்.
உறைப்பு–கொடுமை.
உறவி-ஊற்றுநீர், உறவு, எறும்பு, உயிர், உலக்களம்.
உறவு-பந்துக்கள்.
உற்கை - விண்விழுங்கொள்ளி, நட்சத்திரம்.
உறு-குதித்தல்.
உறுக்கல்-மிகுத்தல்.
உறுகண்-துன்பம், நோய், பயத்தினோடே தொடர் பிணி.
உறுப்பு - தேகம், அவையவம், மரக்கொப்பு, பாலைநிலத்து யாழ்.
உறை-நீர், முதலாந்துளி, மருந்து, நோய்நீக்கியின்

பங்கொடுக்கும் பொருள், கூறை, மாசுகழுபவர், விலங்குணவு, இடைச் சொல், நீளம், வீடு, வெண் கலம், படைபெய்கூடு, உவர்க்கடல்.
உறையுள்-மருதநிலத்தூர்ப் பேர், துயிலிடம், நாடு.
உறுவன்-அருகக்கடவுள், முனி.
உறையூர்-கோழி.
உற்சவம்-திருநாள்.
உற்சாகம்-முயற்சி.
உறுப்படக்கி-ஆமை.
உறுவர்-முனிவர்.
உறுதி-நன்மை.
உற்றவர்-சுற்றம்.
உற்குரோசம்-நீர்ப்பறவை.
உற்பவம்-சென்மம்
உறைத்தல்-செலுத்தல்.
உறுதி-கல்வி.
உறுமரு - சிறையிகுளி.
உறுமை-வாச்சியம்.
உன்னி-குதிரை.
உன்மத்தம் - ஊமத்து, மயக்கம்.
உன்னதம்-உயரம், உள்ளல், கருத்து,நெஞ்சு,நினைத்தல்.
உன்னம்-சீக்கிரம், நீர்ப்பறவை, மனம்.
உனி-உதி.
உபநிடம்-வேதத்தினுட் பொருளின் நுட்பம்.

உகரம் முற்றும்

எகரம்

எக்கல்-சொரிதல்.
எக்குன்னம்- கிழங்கு.
எஃகம்-வேல், கூர்மை, சக்கரம், பிண்டிபாலம், ஆயுதப் பொதுப்பெயர்.
எகினம் - கவரிமா, அன்னம், நாய், புளி, ஆண்மரம், நீர்நாய்.
எக்கழுத்தம்- இறுமாப்பு.
எங்கி-கலன்கழிமகளிர்.
எச்சம்-புத்திரன், புத்திரயாகம், குறைவு, மிகுந்தவுச் சிட்டம், வழியுள்ளார்.
எச்சில் - உச்சிட்டம், ஒழி பொருள், எசித்தல்.
எஞ்சல்–குறைதல்.
எட்டி–காஞ்சிரை.
எடி-எள்ளு.
எட்டுவகை மெய்க்குற்றம்-ஒட்டுதல், பிடித்தல், தீண்டல், தடவல், கட்டுதல், வெட்டல், குற்றல், ஊன்றல்.
எட்டுவகை (குற்றம்) வாணிகம்- ஞான வாணிகம், தரிசன வாணிகம், வேதநியமம், யோகநியமம், வாயுநாமம், கோத்திரநாமம், காயவந்தரம், வாயுவந்தரம்.
எண்வகைக் காட்சி-அறப்பழி மறைத்தல், அழிந்தோரை நிறுத்தல், அறத்தை விளக்கல், அறுசமயத் தவர்க்கன்பு, அவாவொவான்றின்மை, அறிவுவரம்பின்மை, மூடமறுத்தல், அறம் ஐயப்படாமை.
எட்டுவகைக்குணம் - அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்தவீரியம், அனந்த நாமம், அனந்தசுகம், நாமமின்மை,கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவின்பம்.
எட்டுவகைக்கணிதம் - குணகாரம், பாற்கரம், வர்க்க மூலம், கனம், கன மூலம், சங்கலிதம், இரதம்.
எட்டுவகைமணம் - பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராட்சதம், பைசாசம்.
எட்டுவகை வணிகரியல்பு-
தனிமையாற்றல்,
முனிவி[ல]ளுதல்,
இட[னறிந்தொழுக*]ல்,
பொழுதொடுபுணர்தல்,
உறுவதுதெரிதல்,
இறுவதஞ்சாமை,
ஈட்டல், பகுத்தல்.
எட்டுவகைக் கணம்–நீர், நிலம், தீ, மதி, கதிர், அந்தரம், மாருதம், இயமானன்.
எடுப்பல்-எழுப்பல்.
எண்டோளன்-சிவன்.
எண்குணன்-அருகன்.
எண்ணம் - கவலை, வடிவு, கருத்து, கணிதம்.
எண்ணல்-குறித்திடல்.
எண்மை - எளிமை, நன்மை, அழகு, அறிவு, இழிதகவு.
எண்-எள்ளு, இலக்கம், வரையறை, கணிதம், விசாரம்.

எண்கு-கரடி.
எண்ணர்-மந்திரிகள், சோதிடர்.
எண்காற்புள்ளூ-சிம்புள்.
எண்குணம் - எட்டுவகைக் குணம், அட்டமாசித்தி, அளவிறந்தகுணம்.
எதிர்ப்பு-சொல்லு.
எதிர்-இருபடைப்பெயர்.
எதிர்தல்-விரிதல்.
எதிரெடுத்தல்-உவாந்தித்தல்.
எம்மோடு-இடைச் சொல்.
எம்-இடைச்சொல்.
எமி-தனிமை.
எம்மை-எப்பிறப்பும்.
எய்தல்-செலுத்தல்.
எய்-முட்பன்றி.
எய்யாமை-அறியாமை.
எயில்-ஊர், கோட்டை.
எயினர் - பாலைநிலமக்கட் பொதுப்பேர்.
எயிற்றியர்-பாலைநில மகளிர்.
எயிறு-பல்.
எரிவனம்-சுடுகாடு.
எரி-அக்கினி, நரகம், கேட்டை நாள்.
எருவை-கழுகு.
எருந்து-மீன்.
எருக்குதல்-கோறல்.
எருத்தம்-பிடரி,
எருமையூர்தி-காலன்.
எருமைச்சாதி - இருபாற் குமுரித்து.
எல்-இருள், வளரொளி, ஆதித்தன், பகல், இகழ்ச்சி.
எல்லாள்-தோழி, முன்னிலை.
எல்லாமென்பது-தோழி, முன்னிலை.
எல்லை-பகல், அளவு, கூப்பிடு தூரம், ஒளி, நாள்.
எல்லி-இரா.
எல்லு-பகல்.
எல்லொளி-மாயனுடல்.
எல்வை-நாள், வாவி.
எலி-பூரநாள்.
எலுமிச்சு-ஓர் மரம்.
எலு-பன்றி, கரடி.
எலுவன்-தோழன்.
எல்லாமை-அவாவின்மை.
எலே-இகழ்ச்சி.
எவ்வவிலதாய்-[.........]
எவனே-ஐயுற்றசொல்.
எவ்வம்-துக்கம்.
எழில்-அழகு, இளமை, ஒ[ரு]நதி.
எழிலி-மேகம், கடைவள்ளல், எழுதுகோல், மகளிராகத் தெழுதப்பட்டது.
எழுமை-தனிமை.
எழுச்சி-பாய்ச்சல்.
எள-இகழ்ச்சி.
எழுத்து-கணக்கு.
எழு - படைக்கலம், தூண், தொழுவுமலை.
எழுனி-சமனிக்கைத் தொழில்.
எழுவகையுலோகம் - பொன், வெள்ளி, ஈயம்,வெண்கலம், செம்பு, தரா[ம்*], இரும்பு.
எழுவகைத் தீவு-நாவல், இறலி, குயப்பு, கிரவுஞ்சம், சனமலிதக்கணம், புட்பகம் புவியெனும்பேர்.
எழுவகைக் கடல்-உவர், கரும்பு, மது, நெய், தயிர், பால், புனல்.
எழுவகை மலை-இமையம், மந்தரம், கயிலை, வடவிந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி.
எழுவகைமேகம் - புட்கலம்,

மராவணி, புட்கலதரணி, சதாநதி, சலநதி, சகல வருணி, நீலி.

எழுவகை இராகம்-தக்க, துக்க, பழம் தக்க நட்ட ராகம் கின்ன, சங்கீனம்.

எழுவகையோசை–சங்கு, குயில், மயில், ஆனை, புரவி, அன்னம், காடை.

எழுவகையிருடி - விசுவாமித்திரன், இயமன், அங்கி, திங்கள், ஆதித்தன், கவுதமன், காசிபன்.

எழுவகை இசை-குரல்,துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்.

எழுவகைநரகம்-பெருங்களிற்று வட்டம், பெருமணல் வட்டம், எரிவாய்வட்டம், அரிபடை வட்டம், புகை வட்டம், சினவட்டம், இருள் வட்டம்.

எழுவகைத்தாது - இரதம், உதிரம், என்பு, தோல், தசை, மூளை, சுக்கிலம்.

எழுவகைச் செ[ல்வக்] கேண்மை-அறம், பொருள், இன்பம், அன்பு, மறமை, புகழ், மதிப்பு.

எழுவகைச்சுவை-பால், தேன், கள்ளு, நெய், ஏலம், வாழை, தாடிமம்.

எழுவகை வழு-திணை, பால், வினை, மரபு, காலம், செப்புதல், இடம்.

எழுவகை மேலுலகம்-பூலோகம் புவலோகம், சுவலோகம், மகலோகம், சனலோகம், தவலோகம்,சத்தியலோகம்.

எழுவகைக் கீழுலகம் - அதல, விதல, சுதல, நிதல, தராதல, தலாதல, மகாதலம்.

எள்ளல் - இகழ்ச்சி, நகை, உவப்பு, உவமை.

எறிதல்-வெட்டல், குத்துதல், எறிதல்.

எறித்தல்-இரங்குதல்.

எற்று-இரங்குதல், அதிசயம், எத்தல், எரிதல், தன்மைத் தோன்றல், புகைதல்.

எற்றுதல்-படைத்தல், எறிதல், வலித்தல், துணித்தல், வெட்டல்.

எறும்-வலி, தண்டாயுதம்.

எறும்பி-ஆனை.

எறுழி-பன்றி.

என்பு-எலும்பு, பல்லு.

என்றூழ்-ஆதவன், வெய்யில், கோடை, கூற்றுவன்.

என்றே-இடைச் சொல்.

என்-இடைச்சொல், இகழ்ச்சி.

என்னை கொல்- ஐயுற்றசொல்.

என்னே - அதிசயமுற்றிரங்கல்.

எனின் - என்று கேட்பாயாகில் என்றது.

எகரம் முற்றும்

ஒகரம்

ஒக்கல்-உற்ருர்.
ஒக்கலே-பக்கம்.
ஒக்கம்-உயர்ச்சி, வழி.
ஒகரம்-மயில்.
ஒசை-பிண்ணுக்கு.
ஒசித்தல்-வளேத்தல், முறித்தல், துவளல்.
ஒசிதல்-உய்தல், ஒடிதல்.
ஒட்டு - படைவகுத்தல், உயர் திணே, தாலம், உலவைமரம்
ஒட்டார்-சத்துரு.
ஒட்டுனர்-மேவினர்.
ஒட்பம்-அறிவு.
ஒடிசில்-கல்லெறி, கவண்.
ஒடித்தல் – வளேத்தல், ஒளி, முறித்தல்.
ஒட்டல்-உடன்படல்.
ஒடு - உடனிகழ்தலான சொல், மூன்ரும் வேற்றுமை உருபு.
ஒடுவை-மரம்.
ஒடுக்கம்-கூம்புதல், மடங்கல்.
ஒண்மை-அறிவு, அழகு, உத்தமம்.
ஒண்-அழகு.
ஒண்டன்-நரி, ஒத்த தொழிலோர், செட்டியள்.
ஒத்து-ஒதடுதான்
ஒத்தல்-நடுத்தலம், தட்டல்.
ஒத்தர்-சாரணர்.
ஒதுக்கம்-நடக்கிறது.
ஒதுங்கல்-பாச்சல்.
ஒருசார்பு-பொறை.
ஒருவில்-ஒப்பற்றது.
ஒருடி-உரோகணி, ஒருகட்பறை, வாச்சியம்.
ஒருவுதல்-நீங்குதல்.
ஒருபலம்-தொடி.
ஒருமை-ஒற்றுமை, இப்பிறவி, உண்மை, ஒன்று.
ஒருசிறை-வேறிடம்.
ஒருவந்தம்-வேறிடம்.
ஒருவேன்-போகேன்.
ஒருத்தல்-ஆனே, கரடி, பன்றி, புல்வாய், மான், கவரி, எருமை, புலி, மரையென்ற வொன்பதினுடைய ஆண்பால் நாமம்.
ஒல்லே-சிறுபொழுது, விரைவு, கடுப்பு, இறுதி, பழமை.
ஒல்லல்-சத்துரு, பொருந்துதல், உறுப்படி.
ஒல்லுனர்-மேவினர்.
ஒல்கல்-தளர்தல், குழைவு.
ஒலியல்-ஆடை, நோய், மாலே, ஆறு, தோல்.
ஒல்-காற்று, ஓசை, இடி.
ஒல்-முடிவிடம்.
ஒல்லெனல்-அனுகரண ஓசை.
ஒழித்தல்-கோறல்.
ஒழுக்கம் - வழி, உயர்ச்சி, ஆகாயம்.
ஒழுங்கு-நிரை, ஒண்மை.
ஒழுகை-சாடு.
ஒழுகல்-நீளம்.
ஒள்ளியோன்-வெள்ளிபகவான்.
ஒளி-முத்தி, நிறை, பறவை, விளக்கு, இருசுடர், புகழ், ஒளிப்பிடம்.
ஒளிர்தல்-விளங்கல்.
ஒளிவட்டம்-கண்ணுடி, சக்கரம்.
ஒற்றர்-சாரணர்.
ஒற்றுமை-ஒற்றல், வேயர், குறிப்பு, குறிக்கொளல்.
ஒற்றுதல்-உறுதல்.
ஒற்றல் - விருப்பம், உடுத்தல், எதிர்த்தல், குற்றுதல்.
ஒற்கம்-வறுமை.
ஒற்றைக் குண்டலன்-பலபத்திராமன்.
ஒற்றைக்கொம்பன்–விநாயகன்.
ஒற்று-இலக்கம், வீடுபேருகும்.
ஒன்னுர்-சத்துரு.
ஒன்பது-உடும்பு, எண்.
ஒன்பான்-ஒன்பது.

ஒகரம் முற்றும்.

ககரம்

ககபதி-கருடன்.
ககம்-அம்பு, பறவை.
கக்கரிக்கா[ய்]-வாலுங்கி.
ககனம்-விண், படை, காடு.
கங்கம்-பருந்து, சீப்பு, விகங்கம், பட்சி.
கங்கு-வயல், வரம்பருகு, கருந்தினை.
கங்கபத்திரம்-அம்பு.
கங்கணம்-கடகமரணம்.
கங்குல்-இருள்.
கங்காளன்-சிவன்.
கங்கைமகன்-கந்தன், கணபதி, வீட்டுமர்.
கங்கன்-சந்திரன்.
கங்காளம் - அழிந்தவுடலெலும்பு.
கச்சை-தழும்பு, கயிறு, கவசம், ஆனைமேற்றவிசு.
கச்சபம்-ஆமை.
கசடு-குற்றம்.
கசிவு - வருத்தம், அழுதல், வேர்வு.
கசட்டு-அழுக்குப்புடவை.
கசிதல்-அழுதல்.
கச்சம்-கடன், ஆமை, தூம்பு, மரக்கால், அளவை, ஆனைக் கழுத்துக் கயிறு, குதிரைப் படி, கச்சூரம், ஈந்துமரம், கழச்சி.
கச்சி-காஞ்சி.
கச்சளம்-இருள்.
கச்சோதம்-மின்மினி.
கஞறல்-நெருங்குதல், எழுச்சியின் மிகுதி, பொலிவு.
கஞ்சகாரர்-கன்னார்.
கஞ்சுகி - சட்டை, பாம்பு, காவலர்.
கஞ்சுகம்-சட்டை, பணிக்காரப் பள்ளி.
கஞ்சிகை-பரிபூண்ட தேர்.
கஞன்றல்-எழுச்சியின் மிகுதி.
கஞலம்-தண்ணீர்.
கஞ்சம்-தாமரை.
கஞ்சாமரம் - வெண்கலம், தாழை, தாளம், அப்பப் பணியாரம், கள்ளு.
கஞ்சரீடம்-வலியான் குருவி.
கஞ்சா-ஓர் மரம்.
கச்சனம்-அப்பம், வலியான் குருவி, கரிக்குருவி, கண்ணுடி.
கஞ்சனை - கண்ணுடி, கலசப் பானை.
கஞ்சாவி-கள்ளு.
கடை-வாசல், இடம்.
கடல்வண்ணன்-மாயன், சாத்தன்.
கடத்தல்-இறத்தல், தூண்டல், நடத்தல், தாண்டல்.
கடற்பிணு-நெய்தல் நிலமகளிர்.
கடன்-குடியிறை, அளகை.
கடைசியர்-மருதநில மகளிர்.
கட்டல்-களைதல், பிணித்தல், களவு.
கட்டளை-துலாவிராசி, நிறை கருவி, உரைகருவி, ஒப்பு, புனர்ப்பூசம்.
கடை-அங்காடி, உறைவிடம், ஒடுக்கம், மூலம், வாயில், பூணின் கடைப்புணர்வு.

கடைஞர்-மருதநில உழவர்.
கடையனல்-வடவாமுகம்.
கடையம்-ஆபரணம், அயிராணி யாடல்.
கடகம்-கங்கணவாபரணம், வட்டம், கூத்துவிகற்பம், மதில், கைவளை, ஆனைத் திரள்.
கட்சம்-காடு.
கடம்பு-உற்றூர், ஓர்மரம்.
கடாரம்-காழகமென்று பெயர்.
கட்சி-காடு, கூடு, துயிலிடம்.
கடந்தம்-மாப்பரிசை.
கட்டி-அகமகிழ்ச்சி, சர்க்கரை உண்டி.
கட்டம்-மாப்பரிசை.
கடற்சேர்ப்பன்-நெய்தற் றலைவன்.
கட்டியம்-பலகை, பரிசை.
கடம்-கடம்பு, பாண்டம், காடு, ஆனைமதம், அரியவழி.
கடாம்-ஆனைமதம்.
கட்கம்-வாள்.
கடற்சார்பு-நெய்தல் நிலம்.
கட்டு-கழிப்பு, குறுமால், பறித்தல்.
கட்டிறுப்பு-பெரியகாடு.
கடம்பல்-குமிழ்மரம்.
கட்செவி-பாம்பு.
கடறு-அரியநெறி, படைக்கலத் தினுறை, காடு.
கடவுள்-தெய்வம், முனி, நன்மை, நல்லபசு.
கடவுண்மணி-நவமணி, உத் தமம்.
கடவை-ஏணி.
கட்டுரை-வார்த்தை.
கடிகைமாக்கள்-கவிஞர்.
கடினம்-கொடுமை.
கடி-வாசம், உடம்பு, புணர்வு, கைப்பற்றல், அச்சம், வரைவு, புதுமை, கூர்மை, பேய், காவல், காலம், விளக்கம், இன்பம், தாள், சிறப்பு, ஐயம், கலசம், சவம்.
கடிவை-ஆணை.
கடிகை-வேதம், சமயங்கள், நாழிகை, துண்டம், கத வுத்தாள், இரப்போர்கைப் பாண்டம்.
கடிப்பிணை-காதணி, தோடு.
கடிதடம்-மருங்குல், வாவி.
கடிப்பகை-கடுகு
கடிப்பதம்-கெண்டி
கடிஞை-இரப்போர்கைப் பாண்டம்
கடைப்பிடி-தேற்றம், மறப்பி லாமை
கடா-எதிர்மொழி, எருமைப் பகடு
கட்டி-விறகு, சர்க்கரை
கடுகம்-காழ்த்தல்
கடும்பு-பந்துக்கள்
கடு-கடுமரம், விடம், முள்ளு, கசப்பு
கடுகல்-விரைவு
கடுவன்-ஆணை, ஆண்குரங்கு, முசு
கடுக்கை-கொன்றைமரம்
கடுவை-வாச்சியம்
கடுமுள்-படைக்கலம்
கடுமை-மிகுதி, கொடுமை
கடுப்பு-ஒப்புவமை, துரிதம்
கடுத்தல்-உவமை, உவமேயம், வேகம், ச[ங்]கை
கடியாலம்-சூத்திரி
கடிப்பம்-ஆபரணங்கொள் கலம்.

கடிப்பு-கடற்பறை என்னும் வாச்சியம்.
கடப்பாடு-கொடை.
கடகட (எது) - உரோசப்பட்ட ஒலி.
கண்-விழி, இடம், மெய், ஏழாம் வேற்றுமை.
கணவன்-பத்தா.
கணக்கன்-புத்தன்.
கணம்-மாத்திரை, கூட்டம், பேய், திரட்சி, வட்டம், அற்பம்.
கணவம்-ஆரவாரம்.
கண்டகம்-கவசம், வாள், முள், காடு.
கண்டூதி-தினவு, காஞ்சொறிப்பூ
கண்ணுளர்-கூத்தர்.
கண்ணுளர்-சிற்பியர்.
கண்டீரவம்- சிங்கம், கள்ளி மரம்.
கண்டல்-தாழை, முள்ளிப்பூ.
கண்ணி-பூ, மொட்டு, மாலை, நன்னெறிநிற்பவள்.
கணவீரம்-அரளி.
கண்டூரம்-காஞ்சொறிப்பூ.
கண்டறை-கற்பாடு.
கண்டு-சர்க்கரை, ஆட்டுமறி, வண்டு.
கண்டி-வெண்ணெய், மலைப்பூடு.
கண்டிகை-பதக்கம், முலை மேலணிவடம், வாகு வலையம், கலம்பெய்செப்பு, கணம்.
கண்டை-ஆனைமணி, பெரு மணி.
கண்ணறை-அகலம்.
கண்ணுதல்-சிவன்.
கண்ணல்-கருதுதல்.
கண்ணவன்-சந்திரன்.
கண்ணோட்டம் - உள்ளக் களிப்பு.
கண்படை-நித்திரை, அமளி.
கண்வளர்தல்-நித்திரை.
கண்ணுள்-கூத்து.
கண்-நயனம், மூங்கில், இடம், ஏணி, ஏழாம்வேற்றுமை. யுருபு.
கண்டம் - மெய்புகுகருவி, கழுத்து, சமனிக்கை, தூசு, துண்டம், வாள், தேசம், கண்டுசர்க்கரை, ஆனை, துயி லிடம், எழுத்தாணி, வெல்லம், பரிசை, காவல்.
கணித்தல்-வரையறுத்தல்.
கணிகை - பொதுமகளிர், வேங்கைமரம்.
கணி-வேங்கைமரம், மருத நிலம், சாதி.
கணிச்சி-மழு, உளிக்கருவி, தறிக்கருவி.
கணிதம்-எண்ணம்.
கணங்கள்-மக்கட்கூட்டம்.
கணுங்கர்-சண்டாளர்.
கண்டன்-பத்தா.
கண்ணுறல்-காண்டல்.
கணக்கு-எழுத்து.
கணையம்-படைக்கலம், உழலை மரம்.
கணை-திரட்சி, பகழி, செறிவு, ஒலி.
கதத்தல்-பலபடச் சொல்லு தல், பொறுதியின்றிக்கூப் பிடல்.
கதித்தல்-எழுச்சி, சிறப்பு, பெருமை, மிகுதி, ஒலித் தல்.
கதலிகம்-தேற்றாமரம்.
கதம்பம்-கடம்புமரம், களபம்.

கதம்-சினம்.
கத்தவம்-கழுதை.
கத்தூரி-நாவி.
கத்திகை-மாலைவிகற்பம், சிறு செண்பகம்.
கத்தியம்-நல்லாடை.
கத்தா-குயில், ஆயுதம்.
கதி-முத்தி, வருத்தம்.
கதுமென-விரைவு, பொதி, களவு, குறிப்பு.
கதவுகை-சிறுகை.
கதுவாய்-வடுப்படுதல், பட்சி, கவிமோனை.
கதிர்த்தல்-இளையபறித்தல்.
கதுப்பு-மாதர்மயிர், ஆணமயிர், இளைய ஆண்மயிர்கள்.
கதை-தெண்டாயுதம், ஓசைச் சொல், காரணச்சொல்.
கதிர்-பிறபை, ஆதித்தன்.
கதிரம்-அத்திரம்.
கந்திருசு-சாடினுடைய வண்டியினுடைய இரும்பு.
கந்தவாரம்-இராசபத்தினி இல்லம்.
கந்திரங்கல்-மிளகு.
கந்தம்-புலன், வாசம், அழகு, கிழங்கு, கருணைப்பூடு, மஞ்சள், கழுத்து, பகுத்தல்.
கந்தரம்-மலைமுழை, கழுத்து, மேகம், முகம், இரும்பு.
கந்தர்ப்பன்-மன்மதன்.
கந்தன் - சுப்பிரமணியன், அருகன்.
கந்தவகன்-காற்று.
கந்தவாகனன்-காற்று.
கந்திருவம்-குதிரை, இசைப் பாடல், பாலைநிலத்தியாழ், ஆரவாரம்.
கந்தித்தல்-இதமணம்.

கந்துகம்-குதிரை, பந்து.
கந்தல்-கேடு.
கந்தி-கமுகு, தூண், பந்து, பற்றுக்கோடு, வண்டியுளிரும்பு, யாக்கை, கமுகு, வாமநூல் நன்னெறிவழாது நோற்பவள்,
கந்து-சந்து, தறி, ஊற்றம், தூண்.
கபித்தம்-விளாமரம்.
கபாலம்-தலை, மண்டை.
கபிலம்-குரால்நிறம்.
கபிலை-பசு.
கபோலம்-கதுப்பு.
கப்பணம் - 'கைவேல்' எனும் ஆயுதம்.
கபடம்-களவு.
கபாடம்-கதவு.
கபோதம்-பருந்து, புறவு, பறவைப்பொது, கரும்புறு, காப்பு, உயர்ச்சி, மரக் கொப்பு.
கம்மியர்-கண்ணுளர், தொழில் செய்வோர்.
கம்பளர்-மருதநிலவுழவர்
கம்பம்-ஆனைத்தம்பம், தூண்.
கம்படம்-செம்படாம்.
கம்புள்-சங்கு, சம்பங்கோழி.
கடம்-ஆமை.
கம்பு-சங்கு.
கமலம்-தாமரை, தண்ணீர், சங்கு.
கமலமூர்த்தி-பிரமா, அருகன்.
கம்பிலி-வாச்சியம்.
கமர்-விண்டது.
கவி-பாட்டு.
கம்பித்தல்-நடுங்குதல்.
கமம்-குளம் நிறைதல்.
கமித்தல்-நடத்தல்.

கம்பிலடை-அப்பம்.
கம்பலை-மேற்கட்டி, துன்பம், ஒலி, மயக்கம், வயல்.
கமழ்தல்-மிகுமணம்.
கம்-தலை, வாயு, பிரமன், நீர், சுவர்க்கம் விண், மேகம், வெளுப்பு,
கமலை-இலட்சுமி.
கமத்தை-நிறைதல்.
கமகன் - ஞாபகன், செம் பொருள் நடையின் எப் பொருளுமுரைப்போன்.
கமனம்-கொழுந்து.
கம்பி-காதிலணியள்.
கமை-பொ[று]தி.
கயவரி-கழிமுகம்.
கயவர்-கீழ்மக்கள்.
கயவாய்-கரிக்குருவி.
கயமுனி-ஆனைக்கன்று.
கயவை-எள்ளிளங்காய்.
கயவு-மெய்ம்மை, மிகுதி, களவு, பெருமை, மேம்பாடு.
கயம்-மூளை, இளமை.
கயம்-ஆழநீர், ஆனை, வாவி, மென்மை, பெருமை, கீழ், தேய்வு, கேடு.
கயக்கு-சோர்வு.
கயந்தலை-ஆனைக்கன்று.
கயிரவம்-குவளை, குவவி.
கயிலை - கயிலாயமலை, பசு, குரால் நிறம்.
கயினி-கலன்கழிமகளிர், அத்த நாள்.
கயில்'- பிடரி, பூணின் கடைப் புணர்வு.
கயிறு - சூத்திரி, பாசம், குடைதல், செறிதல், கூவல்.
கயிர்-திரள்கோரை.
கரவீரம்-அரளி.
கரம்பை-உவர்மண்.
கரியவன் - சனி, இந்திரன், விண்டு.
கரவாளம்-வாள்.
கரி-சாட்சி, கரி.
கரபத்திரம்-ஈர்வாள்.
கரண்டை - முனிவரிருப்பிடம், கமண்டலம், கற்பாழி.
கரகம்-துளிநீர், கமண்டலம், கங்கை.
கரண்டம்-கெண்டி, காக்கை.
கரப்பு-களவு.
கரவடர்-கள்வர்.
கரப்போர்-இராக்கதர், கள்ளர்.
கரிவி-காழ்த்தல்.
கரமொடு-கழுதை,
கரம்-கை, குடியிறை, மறைத் தல், ஒளி, கழுதை, திடம், மிருகம், வாச்சியம்.
கரணம்-சொல்லியமுற் பொருட் டுணைக் காரண[மு]ம், பல வகையாடல், மனத்தின் பகுதி, எண், கலவி, இந்திரியம்.
கராசலம்-ஆனை.
கரா-மூதலை.
கரடம்-காக்கை, மதவானைக் கவுள்.
கரணஞானம் - செங்கை, கழுதை, இறுதல்.
கரில்-குற்றம், காழ்த்தல்.
கரி-ஆனை, நடு. திரு, தந்தை, இருந்தை, சேறல்.
கரியோன்-மாயன், கறுப்பன், சனி, நடுவன், இந்திரன்.
கரீரம்-ஆனை, ஆனையின் பல்லி னடி, அகத்தி, மிடா, கும்பராசி.
கரளம்-நஞ்சு.

கருணி-பிடியானை.
கரேணு-ஆனை, [பி]டி[யா]னை, கரோடி, சிரமாலே.
கரியவன்-கு..... தத, கள்வன், மாயன்.
கரைதல்-மொழிதல், ஒலி, யாழ், நரம்பு, கருணையுடன் அழைத்தல்.
கரடு-கரண்டை.
கர(ண்)டிகை-வாச்சியம்.
கருங்கை-கொல்லுதல், வன்பணித் தொழில்.
கருணை - [இரக்கம்], மஞ்சள், பூடு.
கருனை-உணவு, பொரிக்கறி.
கரு-சூல், மேடு, பொன்னிறம்.
கருமை-பெருமை, கறுப்பு, வலி.
கருவி-கவசம், பல்லியம், ஆபரணம், கூட்டம், ஆயுதம். மேகம், காரணம், க[ல்]லணை, கச்சை, யாழ்.
கருநிலம்-மலையில் நீரில் வனத்தில்வந்தவத்தினை, மிகு சொற்கருநிலம்.
கரும்பு-இக்கு, புனர்பூசம், தேன், பெண் வண்டு.
கருத்து-மனக்குறிப்பு.
கருணி-ஆனை.
கருமா-பன்றி.
கருமுகை- சிறுசெண்பகம், முல்லை.
கருமான்-புல்வாய்.
கருப்பை-எலி,
கருப்பம்-சினை.
கரு-கட்டளை, காக்கை.
கருநந்து-நத்தை.
கருமுகை-சிறுசெண்பகம்.
கருவூர்-வஞ்சிக்களம்.
கருந்தாது-இரும்பு.
கருள்-பாரி, நல்லாடை.
கருஞ்சினம்-முருங்கை.
கருமல்-பெருமை.
கருமம்-உட்டணம், தொழில்.
கருவரி-இருள்.
கருதல்-மதித்தல். விசாரித்தல்.
கரும்பாகை-வேதம், வேதத்தின் பொருள்.
கருங்குதிரை யா[ளி]-வயிரவன்.
கருநெறி-அக்கினி.
கருவர்-கொல்லர்.
கருத்தபம்-கழுதை.
கருவிழலை-பாம்பின் விகற்பம்.
கருஞ்சனம்-அன்றில்.
கருஞ்சினம்-பொன்.
கருங்கொல்லு-இரும்பு.
கரும்பொன்-இரும்பு.
கருள்-கறுப்பு.
கருப்[பூ]ரம்-கற்பூரம்.
கரும[ந்திரம்] - மந்தவோசை.
கருள்-கள், உரோசப்பட்ட வொலி.
கருவிளை-ஓர் பூடு.
கலவி-கலத்தல், அறிவுநூல்.
கலம்-யாழ், தாலம், பதார்த்தம் இடப்பட்டது.
கலாபம்-மயில், மயிற்பீலி, பீலிக்குடை, பதினறு கோவையின்மணிமேகலை, சரிமணி.
கலன் - ஆபரணம், யாழ், நாவாய்.
கலசம்-தாமரை, கும்பம்.
கலவை-சாந்தின் பொது, களபம்.
கலசப்பானை-கஞ்சனை.
கலம்பகம்-களபம், துழாவல்,
கலகல-உரோசப்பட்டவொலி.
கல்லகாரம்-நீர்க்குளிரிப்பூடு.
கல்-மலை, கல்வி, திரள்கல்

தோண்டுதல்.
கல்லோலம்-நீர்த்திரை.
கல்லூரி-அத்திரம் பயிலிடம், பலகலை பயிலிடம்.
கல்லியூரி-பலகலையும் பயிலிடம்.
கல்லெனல்-ஓசை.
கல்லே[று*]-கவண்.
கலாவல்-கலத்தல், துழாவல்.
கலானி-சந்திரன்.
கலாம்-கோபம். கொடுமை.
கல்லென்றிடல் - அனுகரணவோசை.
கல்லகம்-மலை.
கலக்கம்-துக்கம், அழுதல்.
கலாலை-துழாவல்.
கலூரம்-மேம்பாடு.
கலினி-திப்பிலி.
கலிணை-மிளகு,
கலினர்-வீரர்.
கலம்-வன்னிமரம், பூ, மொட்டு.
கலிங்கம்-துகில், தேசம், கம்புள்.
கலி-மிகுதி, வலி, கடையுகம், கடல், ஓசை.
கலித்தல்-ஒலி, பொலிவு, மிகுதி,
கலித்துருமம்-தான்றி.
கலியாணம்-பொன், விழா.
கலுடை-கலங்கற்றண்ணீர்.
கலுழ்-அழுதல், இரக்கம்.
கலுழி-கலங்க[ல்*] நீர், நீர் முள்ளி, அழுதல், கான்யாறு.
கலை-நூல், கல்வி, புடவை. பங்கு, காஞ்சிமரத்தின் வயிரம், சுருல், மீனவிராசி, பிறை, நிரம்பல் மரக்கொப்பு, நுட்பம், மானேறு, மதி, மணிமேகலை, முசு.
கலைமகள்-சரசுவதி.
கவ்வை - ஆயிலியம். துக்கம். பழிமொழி, குற்றம், கள்ளு.
கவான்-தொடை.
கவணை-கல்லெறி, கவண்.
கவர்தல் - வேட்கைப்பெருக்கம்.
கவனம்-கலக்கம், காடு. விரைவு, படை, குதிரையின் கதி.
கவற்சி-வருத்தம்.
கவந்தம்-தண்ணீர், குறைத்தலை, அட்டை.
கவ்வாணம்-இராகம்.
கவடி-சோகி.
கவடர்-கள்ளர்.
கவலை - துன்பம், கவர்வழி, கம்பு, கபிலை, புல், கிழங்கு.
கவை-எள்ளிளங்காய்.
கவலை-கரடாயில்.
கலைஞர்-கற்றவர்.
கவையம்-காட்டா.
கவை-நீர்ப்பாம்பு.
கவைத்தாள்-நண்டு.
கவர்வு-விருப்பம், மாறிளங்கப்பு.
கவடு-கப்பு, ஆனைகட்டும் கயிறு.
கவளம்-திரட்சி,
கவரி-எருமை, சாமரை, சிரகம், தேர், கிடா.
கவின்-கட்டழகு, அழகு, சூத்திரி.
கவர்தல்-வளைத்தல், கைப்பற்றல்,
கவித்தல்-மூடுதல்.
கவிர்-கசமரம்.
கவிரம்-அலரி.
கவிப்பர்-செட்டியள்,
கவடு-மரத்தின் கொம்பு.
கவிகை-குடை, கொடை,

கவிதை-பாட்டு.
கவி-கவிதை, குரங்கு, வெள்ளி, புலவன்.
கவித்தியர்-கண்ணுளர்.
கவுந்தி - புத்தநூல் நன்னெறி வழாது நோற்பவள்.
கவுரி - பார்வதி, பத்ரகாளி, பகவதி.
கவிப்பு-வெள்ளைக்குடை.
கவுரம்-வெள்ளைநிறம்.
கவினம்-வெண்ணெ.
கவுத்தவன்-அத்தநற்கெத்திரம்.
கவுத்துவம்-பதுமராகம்.
கவுரவர்–குருகுலத்தரசர்.
கவுதம்-பறவையிலொன்று.
கவுரியன்-பாண்டியன்.
கவுசிகன்-இந்திரன், விசுவாமித்திரன், கூகை.
கவுண்டர்-சண்டாளர்.
கவுள்-கதுப்பு.
கவுசிகம்-இராகம், விளக்குத் தண்டு, பட்டாடை, கோட்டான், கவுடி.
கழனி–வயல்.
கழகம்-சகலகல்வி பயிலிடம், சூதுப்போரிடம், மற்பொருதலிடம்.
கழல்-மூலநாள், வெருமுதல், கால், வீரக்கழல், பொன் வட்டு, செருப்பு.
கழம்-கணங்காட்டு, கொடிக் கழல்.
கழங்கு-கொடிக்கழல், வெறியாட்டு, வேலனுடல், மரவட்டு.
கழனி-சமனி, தக்கை, தூசு.
கழிவு-மிகுதி, உள்ளது.
கழிதல்-சாதல்.
கழை-மூங்கில், கரும்பு, புனர் பூசம்.
கழுநீர்-நீலோற்பலம்.
கழுமுள்-சூலம், மாதளை, ஆயுதப்பொது, கழுக்கடை.
கழு-சூலம், கடந்திடல். மிகுதி.
கழுக்கடை-கழு[மு*]ள்ளாயுதம்.
கழகு-சூது.
கழுமல்-பற்று, மயக்கம், மிகுதி.
கழுகு-கருடன், எருவை.
கழுதைவாகினி-மூதேவி.
கழுது-வண்டு, பேய், பரண், பேய்த்தேர்.
கழுத்து-கண்டம்.
கழறல்-உறுதிச்சொல்.
கழி-செருக்கு, குளம்பு, குற்றம்.
களமர்-மருதநில மாக்கள்.
கழறல்-உறுதிச் சொல்.
களன்-பொய்கைத் தொடர்பு, மருதநிலமயக்கம்.
களம்-இடம், மிடறு, பொரு நிலம்.
களர்-நிலம், கருமை.
களர்-மரம், கள்ளர், விடம், ஆழ்தம், சூது, கூத்துப்பயிலிடம், பல்கலையும் பயிலிடம் இல்லாள்.
களரி-கருமம் செய்யிடம், கானம், பொருநிலம், கரம்பை.
களவு-திருடுதல்.
களா-களாமரம்.
களேபரம்-உடம்பு, கழிந்த வெலும்பு, பிணம்.
கள்வன்-கற்கடகம், நண்டு. சோரன், முசு, ஆனை, கருநிறத்தன்.
கள்ளம்-களவு.
கள்-தேன், களவு, ஒலி.

களகவென்றல்-போரொலி.
களபம்-ஆனைக்கன்று. சாந்து, கலவை.
களகண்டம்-குயில்.
கள்ளு-தேன்.
களர்-உவர்மண்,
கள[த*]புதம்-வெள்ளி.
கள்ளல்-களவு.
களகம்-சுடு சுண்ணச்சாந்து.
களங்கம்-கறுப்பு, மாசு, தீங்கு.
களங்கன்-சந்திரன்.
களதம்-பெருச்சாளி.
களிறு-அத்தநாள், ஆனை, சுறவு, பன்றி.
களிமறல்-மயக்கம்.
களைதல்-பறித்தல்.
களைகண்-தஞ்சம்.
களைஞர்-சண்டாளர்.
களரவம்-புறவு, பறவைப் பொது.
களரி-காடு, போர்க்களம்.
களிப்பு-உள்ளக்களிப்பு.
கற்பால்-தறி.
கற்பகம்-தரு.
கற்கடகம்-நண்டு, இராசி.
கற்பம்-அமருலகு, பிரமன் வாணுள், கற்பகக்கொடி. காமகற்பனை, வல்லிக் கொடி.
கற்பாழி-பிலம்.
கற்பகம்-நாள், சுவர்க்கம், நிலை.
கற்றை-கதிர்த்தொகுதி. மயிர்த் தொகுதி, பொலவன்.
கறங்கு-சுழல்தல், ஒலி.
கறி-மிளகு, தேயுத் தொழில், விலகு, வெருவும்.
கறல்-விறகு.
கற்பொறி-இடங்கணி.
கற்கரி-கரகம்.

கற்றல்-பயிலுதல்.
கறுள்-குதிரைக் கருவியாகிய சூத்திரி.
கறையடி-ஆனை.
கறை-உதிரம், ஊர், செம்மை, இறுத்திடல், நகரீ, கறுப்பு, குடியிறை, ஊறல், குற்றம்.
கறுவு-சினம்.
கறுப்பு-சினம், இருட்டு, சினக் குறிப்பு.
கறு-சினம்.
கன்னி-பகவதி, இராசி, பேதைப்பெண், கருவிளையாம், கட்டழகு, கற்றூழை, அழியாதது.
கன்னிகாரம் - கோங்கு.
கன்னுவர்-கன்னுர்.
கனவீரம்-அரளி.
கனகத்தர்-சண்டாளர்.
கனவட்டம்-குதிரை.
கன்று-விலங்குக்கும், மரத்திற்குமிளமை, கையில் வளை, அற்பம், குருகு.
கன்றல்-சினம், சினத்தின் குறிப்பு.
கன்னம்-காது, கன்னக்கோல்.
கன்னிகை-அழிவிலாதது, சிறு பெண்.
கன்னல்-குடம், நாழிகை, கரும்பு, சர்க்கரை, வட்டில், காரகம்.
கனலி-தீ, கதிரவன்.
கனவு-துயில், மயக்கம்.
கனம்-வட்டம், திரட்சி, மேகம், தேகம், செறிவு, பாரம்.
கனகம்-பொன்.
கனரசம்-தண்ணீர்.
கனி-பழம், தித்திப்பு.

கனைத்தல்-ஒலித்தல், ஆரவாரம்.

கனவம்-அரசமரம்.

கனம் - பூமியாவது, உழவுத் தொழிலே வரைவு, வாணிகம். விச்சை, சிற்பம், என்றித்திறத்தறு தொழில், கற்பகடையது, கருமபூமி.

கனருசி-மின்.

கன்னன்-இடை வள்ளல்.

கனுட்டர்-ஙீசர்.

கனிட்டன்-பின்பிறந்தோன்.

கன்-கல்லு.

கனசாரம்-கற்பூரம்.

கன்னுவதங்கம்-செவிமலர்ப்பூ.

கன்மம்-தொழில்,

கனு-நித்திரை.

கனிதல்-சோம்பு.

ககரம் முற்றும்

ககர விகாரம்

இக்கு-கண்.
இசலயம்-தளிர்.
இச்சு-குடை, அக்கினி.
இஞ்சுமாரம்-முதலை.
இஞ்சம்-புளிமா.
இஞ்சுகம்-முருக்கமரம், சிவப்பு நிறம்.
இருட்டிணன்-அருச்சுனன்.
இடக்கை-பூதலம், பாயல்.
இடாய்-ஆடு, ஆட்டேறு.
இட்டி-தலையீற்றுப்பசு, தாளம்.
இடங்கு-குளம், பள்ளம், கோட்டையகழ்.
இடுகு-தேரின் மரச்சுற்று, ஓலை, முடை, முதல் மரப்பரிசை.
இடை-உவமை, சடை.
இடக்கை-இடைச்சு.
இடில்-பன்றி.
இகிணி-வலியான் குருவி, கருவிளமரம்.
இட்டல்-எதிர்தல்.
இண்இணி-அரைநாண்மாலை.
இணகர்-அடிமை.
இண்ணம்-வட்டில்.
இயாதம்-மேம்பாடு.
இணை-மருதநிலப்பறை.
இம்புரி-தந்திப்பூண், ஆனைக் கொம்பு, முடியங்கம்.
இரீரம்-இடர்.
இரிசரம்-ஆனை பிறந்த நிலம்.
இரிஇடி-பன்றிப் போத்து.
இரீபம்-கழுத்து.
இரி-மலை, பன்றி.
இரிது-வேள்வி.
இருத்திவாசன்-சிவன்.
இருதம்-நெய்.
இருசம்-இளைத்தல்.
இரீடம்-மணிமுடி.
இரீடி-அருச்சுனன்
இரீடை-மகளிர் விளையாட்டு, புணர்ச்சி.
இரணம்-ஆதித்தகிரணம்.
இரணம்-ஒளி.
இரணன்-சங்கரன்.
இரீசன்-சிவன்.
இரீயன்-சிவன்.
இருத்திமம்-தோல், பூதம், பண்ணல், பொய்.
இருட்டி-பன்றிப்போத்து,
இராதர்-கீழ்மக்கள், ஐந்துநில மக்கள்.
இராமம்-ஊர், வயல்சூழ்ந்தவூர், நீரிற்கிளர்ந்தெழு பறவை.
இராணம்-மூக்கு.
இலம்-முழுவதுமில்லாதது.
இலாலம்-தண்ணீர்.
இலாபம்-ஆலி.
இலேசம்-வருத்தம்.
இலுத்தம்-மணிக்கட்டு.
இலுஇலுப்பை-பகன்றைமரம்.
இல்லேன்-செய்யேன்.
இழவோன்-பரணி நாள்.
இழார்-ஆம்பி.
இழவர்-மூதறிந்தோர்.
இழாமர்-கூத்தர்.
இழவன்-மருதநிலத் தலைவன், வயோதிகன், பரணிநாள்.
இழக்கு-பள்ளம்.
இழத்தி-மருதநிலத்தலைவி.
இழங்கு-மூலம்.
இழமை-உரிமை, விதி, குணம், வாரம்.
இழி-எழுதுபடம், நிதிப்பொதி, இழிபடுதுகில்.

கிழித்தல்-பீறல்.
கிளிகை-மொட்டுப்பூ.
கிளிஞ்சி-மீன்வற்கம்.
கிளி-சுருவி, இலைமூக்கருவி,
புரு, கிஞ்சுகம்.
கிள்ளை-குதிரை, கிளி.
கிளை-மூங்கில், வெந்து, ஓர்பண்,
கிளைத்தல்.
கிளைஞர்-வெந்து, தோழர்,
உழவர்.
கிளைத்தல்-கிளறுதல், நிறைதல்.
கிள[வி]-சொல்லு.
கிளப்பு-சொல்லு.
கிறவுஞ்சம்-அன்றில்.
கிறுமி-புழு.
கிறுது-வேள்வி.
கிறி-வழி.
கிறுபை-இரக்கம்.
கிற்பேன்-செய்வேன்.
கின்னர[ர்*]பிரான்-குபேரன்.
கின்ன[ர*]ர்-கந்திருவர்.
கின்னரம்-வீணை, நீர்ப்புள்.
கின்னரி-ஆந்தை, வீணை.

கிகரம் முற்றும்.

க்கர உகரம்

குகன்-சுப்பிரமணியன், குகன்.
குக்கி-வயிறு.
குக்குடம்-கோழி, பாம்பின் வற்கம்.
குக்கிலம்-வெண்குருகு, செம்போத்து.
கு-பூமி, நாலாம் வேற்றுமை.
குங்குமம்-ஓர்மரம்.
குங்குலு-குங்குலியம்.
குசம்-தெற்பைப்புல்.
குச்சம்-குலைபாவாற்றி, கூத்து, தெற்பைப்புல்.
குசை-தெற்பைப்புல், சூத்திரி, மரப்பொது, திடர்.
குசலர்-மிகவல்லோர்.
குசெயம்–தாமரை.
குசன்-செவ்வாய்.
குசும்பை-செந்திருக்கும் பூ.
குஞ்சி-ஆண்மயிர், படங்குந்தி நிற்றல்.
குச்சரி-ரோகம்.
குஞ்சரம்-ஆனை.
குஞ்ச[ம்*]-குறளை, குறள், நாழி, குன்றி.
குஞ்சராசனம்-அரசமரம்.
குடம்-கும்பராசி, கும்பம், நாராயணனுடல், பசு, கைகொட்டிக் குவித்தல், கூத்து, மருதநிலத்தூர்.
குடனுடன்-சேரன்.
குட்டுவன்-சேரன்.
குடங்கை-அகங்கை.
குடங்கர்–கும்பம், குடினை.
குட்டம்-ஆட்டுக்குட்டி, குளம், தொழுநோய்.
குடசம்-வாலைமரம்.
குட்டி-முயல், கிரி, பன்றி, பூனை, நரி, நாயின் பறள்.
குடக்கு-மேற்றிசை.
குட்டினி-கூனி.
குடவர்-இடையர்.
குடத்தியர்-இடைச்சியர்.
குட்டன்-பிள்ளை, ஆட்டுமறி.
குடிலம்-ஆகாயம், குடாமரம், மயிர், சிலை, வஞ்சனை,
குடினை-ஆறு. புட்பொது, கோட்டான், குருவி.
குடிக்காடு-மருதநிலத்தூர்.
குடைவேல் - மரம், கவிகை, ஈயம், குமரனுடல், மிதியடியின் மேற்கொட்டை.
குட[ா*]ரம்-கோடாலி.
குடமாடல்-மாயனுடல்.
குடமுளவு-வாச்சியம்.
குடுமி-வெற்றி, உச்சி, ஆண்மயிர்.
குடி-குலம், புருவம், மருதநிலத்தூர், கொடி, கொள்.
குட்டிமம்-திண்ணை.
குட்டல்-தகர்த்தல்.
குடும்பம்-திறி, கிளைஞர்.
குடும்பு-குலை, குடுவை, சிறுபானை.
குடில்–சிறுவீடு.
குணபாசு-பெ[சா*]சு
குணபம்-பேய், சவம்.
குண்டை-எருது.
குணக்கு-கீழ்த்திசை.
குண்டு-சிறுவயல், குதிரையாண்பால்.
குடுவை-பானை.

குணம்-விதி, கயறு, பண்பு, கும்பம், வில்நாண்.
குணன்-கொள்கை.
குண்டிதன் புதல்வன் - தன்ம புத்திரன்.
குணித்தல்-வரையறுத்தல்,
குண்டமூர்ந்து-ஆழநீர்.
குணில் - குறுந்தடி, கடிப் பென்னும் வாச்சியம், கல்லெறி, கவண்.
குணி-ஊமை.
குணுங்கு-பேய், நுட்பம்.
குண்டிலி-இசங்கமரம்.
குணுங்கர்-சண்டாளர், குயிலுவர், தோற்கருவி இசைக்கும் பேர்.
குண்டன்-சோரபத்தாவின் பிள்ளை.
குண்டிகை-கமண்டலம்.
குண்டம்-குளம், குழி, பானை.
குண்டலம் - காதிலணி குழை, ஆகாயம், வட்டம்.
குணலம்-கூத்தின் விகற்பம்.
குத்து-குற்றம், புடைத்தல், மயிர்.
குதிர்-நெல் முதலாம் பண்டம் போடுந்தலம்.
குதித்தல்-தாண்டல்.
குதலை-மழலைச்சொல்.
குதை-அம்பு, அம்பிற்குதை.
குதம்பம்-இடுகு, விளக்குத் தண்டு.
குத்திரம்-வஞ்சம், விரைவு, மலை.
குத்தி-மண், அடக்கம், மடங்கல்.
குந்தம்-குதிரை, குருந்து, வேல், கள்ளு, வியாதி.
குந்தி-கள்ளு.
குந்திரம்-குறிப்பு.
குப்பம்-ஊர்க்கூட்டம்.
கும்பை-மேடு, திரள்.
கும்பல்-கூட்டம்.
குப்பாசம்-சட்டை.
குப்புற்றல்-தாண்டல்.
குப்புறல்-பாய்தல்.
குபேரன்-சந்திரன், தனபதி.
குப்பி-அம்பிற்கட்டு.
கும்பிடல்-அஞ்சலி.
குமிழென்றிட்டல் - அநுகரண வோசைச் சொல்.
குமரி - பகவதி, கன்னிகை, கற்றாழை, அழிவில்லது, காளி.
குமிறல்-ஒலித்தல், பே[ர]ரொலி.
குமாரி-பத்திரகாளி.
குமிலம்-பே[ர]ரொலி.
குமரிச்சேர்ப்பன் - பாண்டியன்.
கும்பியம்-சந்திரன் பொதுப் பேர்.
கும்பகாரர்-குயவர்.
கு[மி]கை-இளவெள்ளு.
கும்பீனசம்-பாம்பு.
குமரன் - கந்தன், பிள்ளை, க்ஷேத்திரபாலன், புருடர்.
கும்ப[ம்*]-குடம், ஆனை மத்தகம், கும்பராசி.
குமுதம் - வெள்ளாம்பல், வெண்ணிற நெய்தல், அடுப்பு, தெருப்பைப்புல், திக்கயத்தொன்று, பே[ர]ரொலி.
கும்பிகை-வாச்சியம்.
கும்பி-ஆனை, நரகம், புற்று[ஞ்*] சோறு.
குமை-திரட்சி, குத்துதல்.
குமிழ்-மரம்.
கும்பயோனி-அகத்தியன்.
கு[டு*]ம்பினி-மனையாள்.

குமரம்-கொம்பிலா விலங்கு.
குவளை-செங்கழுநீர்.
குவடு - மலை, சிறுமலை, மலையினுச்சி.
குவால் - மேடு, குவிக்கப் பட்டது.
குவை-ஊர், திரளாகிய குமியல், மேடு.
குவவு - திரள்வடிவு, குவிக்கப் பட்டது, பெருமை, பூ, சாரியைச் சொல்.
குவிதல்-திரள் வடிவு.
குவிதல்-கூடுதல்.
குவலயம்-பூமி, செங்குவளை, கருங்குவளை.
குவளைக்கண்-செழுங்கழுநீர்.
குவளையத்தாரன் - தன்ம புத்திரன்.
குவி-இலைமூக்கரிகத்தி, தன பாரம்
குயவரி-புலி.
குயிலுவர்-நரம்புக் கருவியிழைக் கும் பேர்.
குயிலுவத் தொழில் - நரம்புக் கருவியிசைப்பாணர்.
குயவு-தேர்.
புயா கோங்குமரம்.
குயம்-முலை, கோடுவாள் இளமை, வட்டம், ஊர்க் குருவி, நறும்புகை.
குய்யம்-வஞ்சம்.
குயிறல் - கூவுதல், குடைதல், தாண்டல், குளைத்தல், சொல், செய்தல்.
குயின் - மேகம், குயில், கோகுலம், துளை, கோபுரம்.
குயிற்றுதல்-துளைத்தல்.
குயிலாயம்-பஞ்சரம், பண்ணுங் கூடு.
குரல்-மாதர், பறவை இறகு, இசை, கதிர், மரத்தின் கதிர், பலதானியக்கதிர், வீணை, நரம்பு, நெற்கதிர்.
குரமரம்–கற்பக தரு.
குரவன் - பிரமா, ஆசாரியன், மூத்தோர், பிதா.
குரவோர் – நூல்வல்லோர், அமைச்சர்.
குரத்தி-தலைவி, நெய்தல் மகளிர்.
குரவம்-ஓர்மரம்.
குரகதம்-குதிரை.
குரவரம்-வாடாக்குறிஞ்சி.
குரவகம்-குறிஞ்சிமரம்.
குரம்-குதிரைக் குளம்பு.
குரக்கை-குதிரைக்குளம்பு.
குரண்டம்-கொக்கு.
குரம்பு-புனற்கரை, செய்யப் பட்டகரை, வயல் வரம்பு.
குரால்–கபிலநிறம், கோட்டான், குருவி.
குரோதம்-கோபம்.
குரங்குதல் - இறைஞ்சுதல், வளைதல்.
குரோட்டா-நரி.
குரோடம்-பன்றி.
குரோசம்–கூப்பிடு தூரம்.
குரோசனை-ஒலி.
குரவை-கூத்து, கைகோ(ர்)த் தாடல், வேய், தடல்.
குரம்பை-தேகம், சிறுவீடு.
குரை-ஓசை, நீர்க்குமிழி, இடைச்சொல்.
குரங்கி-சந்திரன்.
குரங்கம் - மான்.
குரு-வியாழம், ஆசான், பெருமை.

குரவன்-நிறம், வியாதி, கொம்பிலா விலங்கு.
குருகு-திருவோணம்,குருக்கத்தி, வளை, நாரை, மூக்கு, கோடு, மூலநாள், புள்ளு, வெள்ளை, கொல்லனுலை.
குருசில்-ஐ, சிறந்தோர், அரசன்.
குருக்கண்-முலை.
குருதி-இ[ர*]த்தம், சிவப்பு, செவ்வாய்.
குருந்து-ஓர்மரம்.
குருக்கத்தி-ஓர்மரம்.
குருப்புகை-நறைபடு கொழும்புகை.
குருளை-இளமை, முயல், பன்றி, நரி, நாயின்குட்டி.
குருவி-பூசம், மூலநாள், பறவை, பஞ்சரிமரம்.
குருள்-பெண்மயிர்.
குரு-கனம், அதிபாரம்.
குருத்து-வெள்ளைநிறம்.
குருத்து-மூன்கோபம்.
குருமித்தல்-எழுத்திலோசை.
குலைதல்-குன்றல்.
குலாலர்-குயவர்.
குலவு-வில்லிட்ட குதை.
குலை-கொத்து, அம்பிற்குதை, செய்புனற்கரை.
குலுகுலு-குங்குலியம்
குலாவல் - வளைதல், பரிந்து கொண்டாடல்.
குல்வலி-இலந்தைமரம்.
குலம் - இல்லம், குடிமை, கூட்டம், மிருகத்தின் கூட்டம், மன்னன் இ[ல்*]லம்.
குலிசம்-வேல், சாதிலிங்கம், வச்சிராயுதம்.
குலிங்கம்-ஊர்க்குருவி.
குலிகம்-இருப்பை, சாதிலிங்கம்.
குலத்தம்-காணம்.
குல்லை-கச்சங்கம், முடி, துழாய், பச்சை, கஞ்சாமரம், வெட்சிமரம்.
குலீனன்-குலமில்லோன்.
குலவர்-ஐந்துநில மக்கள்.
குழவி-மக்கள், விலங்கு, மரத்திளமை, பச்சிலை.
குழூ-மக்கட்கூட்டம்.
குழுமி-தொகுதியாகிய கூட்டம்.
குழைத்தல்-தளிர்த்தல்.
குழல்-துளை, மயிர்முடி, மயிர், ஆண்மயிர், பெண்மயிர்.
குழை-குண்டலம், தளிர், சேறு, துழையுடை பொருள்.
குழகு-இளமை, அளகு.
குழவு-துளவம், மயிர், இளமை.
குழி-கயிறு, கிணறு, பள்ளம்.
குழியம்-பாருவளையம்.
குழிசி-பானை, மிடா.
குழியம் - திரள் வடிவு, மருந்தின் பொதுப்பேர்.
குழை - கச்சி, நெய்தல் நில மகளிர்.
குழை-வில், கோவேறு கழுதை, அருவருப்பு.
குழம்பு-சகதி.
குளித்தல்-முடுத்தல்.
குளகு-விலங்குணவு.
குளம் - சற்கரை, குட்டம், நெற்றி.
குளநெல்லு-நீர்வாரம்.
குளகம்-தூம்பு.
குளியம்-வேங்கை.
குளிர்-நண்டு, இலை மூக்கரி கத்தி, மீனெழுக்கம், கல்லெறி, கவண், முள வெனும் வாச்சியம், காயா

மரம், கிளி கடிகருவி, மழு, குடம், குளிர்ச்சி.
குளிரடி-பிறப்பார்,
குளிரி-குடமுழவு, ஞெண்டு, குளகச் செய்யுள், குற்றெழுத்துத்துடர்வது.
குளிறல்-ஓசை.
குளிகன்-சுப்பிரமணியன்.
குளவி-மலையம்பச்சை.
குளை-வளைதல்.
குறங்கு - துடை.
குறவர் - குறிஞ்சிநிலமக்கள், பொதுமர்.
குறத்தியர்-குறிஞ்சிநிலமகளிர்.
குற்குலு-குங்குலியம்.
குற்குத்த-குழை, காது.
குற்றம்-களங்கம், தீங்கு.
குறள்-மாயன், கட்டையன், பூதம்.
குறி-ஊர், யோகம்.
குறண்டி-இராகம்.
குறிப்பு-கருத்து, ஒற்றுமை.
குறிக்கோள்-ஒற்றல், பேயே.
குற்றல்-குறல், பறித்தல்.
குறுங்கண்-சாளர வாசல்.
குற்சிதம்-அருவருப்பு.
குறளை-கோள், கூத்து.
குறிஞ்சிமன்-அறுமுகன்.
குறிஞ்சி-யாழ், மைவழம், காந்தாரம், படுமல், பஞ்சுரம், மருள், வயிரவி, பற்று, செந்துரம்.
குறும்பொறைநாடன் - முல்லைநிலமகன்.
குறும்பொறை-மலை, சிறுமலை, காடு, குறிஞ்சிநிலம்.
குருபரல்-கொடிக்கலம்.
குறிச்சி-ஊர், கு[றி*]ஞ்சி நிலத்தார்.
குறும்பர்-பாலைநில மன்னர்.
குறும்பு-பாலைநிலத்தூர்.
குறும்பன்-பூசல்.
குறுகல்-அணுகல்.
குற(ண்)டு-பலகை, திண்ணை, முண்டு, வாச்சியம்.
குறுந்தறி-போதிகை.
குறிக்கோள்-தேற்றம், குற்றெழுத்துத்துடர்வது, குளகப்பாட்டு.
குறுமை-அளகு.
குறுவாட்கை-வறுமை.
குறுதல்-பறித்தல்.
குறும்பிடி-உடைவாள்.
குறும்பூழ்-காடைக்குருவி.
குறிஞ்சி-மலைச்சாரல், நிலம், செம்மலப்பார், துள்ளி, பண், பாலைநிலத்தியாழ்.
குறுங்கலி-நன்னுதற்றுறந்தது.
குற்றிசை-பழிப்பவன்முன்னின்றுரைத்தது.
குறைதல்-குன்றல்.
குரோதம்-கொடுமை, கோபம்.
குறை-குறைபாடு, பாகுடம், குற்றம், மிடி, கோள், ஓசை, இடைச்சொல்.
குரோதன்-வீரபத்திரன்.
குன்றவர்-குறிஞ்சிநில மக்கள், ஐந்து நிலமக்கள்.
குனிப்பு-கூத்து விகற்பம்.
குன்று - மலை, சிறுமலை, சதையனுள்.
குன்றல்-குறைதல்.
குன்றவர்-குறவர்.
குனமினி-யோகினி
குன்னம்-அழகு.
குன்னமம்-நெருக்கமா, தூறு.

குகரம் முற்றும்

ககர எகரம்

கெடாகின்-மூதேவி.

கெடவரல்-மகளிர் விளையாட்டு

கெடிறு-கெளிற்றுமீன்.

கெடுதல்-சாய்தல்.

கெட்டேன்-அதிசயம்.

கெண்டல்-களைதல்.

கெழு-இடைச்சொல், நிறம், உரிமை.

கெழுவுதல்-நிறைதல்.

கெழுதகை-வளரொளி.

கெழுமல்-பயிலுதல், புல்லல்.

கெவுளி-பல்லி.

கெடலணங்கு-மூதேவி.

கெகரம் முற்றும்

ககர ஓகரம்

கொக்கு-பறவை, மாமரம், திருவோணம், குதிரை, சென்ஞய், மூலநாள்.
கொக்கரை-பாணி, வீணை, சங்கு.
கொங்கு-மணம், பூவின் தாது.
கொங்கன்-சேரன், நெய்தல் நிலத் தலைவன்.
கொங்கை-முலை, மணம்.
கொச்சை-வெள்ளாடு.
கொஞ்சல்-குதலைச் சொல்.
கொடிறு-கதுப்பு, பூசம்.
கொடிச்சியர் - குறிஞ்சிநில மகளிர்.
கொடி-காக்கை, துவசம், நீளம், பெண், மரத்தின் கொடி.
கொட்கல்-சுழலல்.
கொட்டில்-வேறிடம்.
கொட்டை-விதை, தாமரைப் பொகுட்டு.
கொட்பு-சுழலுதல், சுழற்றி.
கொடை-தியாகம்.
கொடைமடம்-வரையாது கொடுத்தல், வசை.
கொட்டி-சிவனுடல், குமரனுடல்.
கொடிப்பாலை - பாலைநிலத்து யாழ்.
கொடியர்-கூத்தர்.
கொட்டான்-கூகை.
கொடுறு-கதுப்பு, பூசம், கருவிப் பற்று.
கொடுவரி-புலி.
கொடுகொட்டி-சிவன்கூத்து, நொய்தல்.
கொடுமுடி-மலையினுச்சி.
கொடுமரம்-வில்லு, தனுராசி.
கொடுஞ்சி-தேர், தேர்மொட்டு.
கொடும்பை-குளம், தாமரை, பச்சிலை, அருவி.
கொடுவாய்-புறங்கூற்று.
கொடுநுகம்-மகநாள்.
கொண்டாடல்-புகழ்தல்.
கொண்டிகம்-கெணுடி.
கொண்டல்-மை, மேடம்.
கொண்டல்-மேகம், காற்று கீழ்க்காற்று, சேர், முகத்தல்.
கொண்டி-கொள்ளை, கூத்து,
கொண்கன்-சேரன், மருதநிலத் தலைவன், பத்தா.
கொண்டகம்-குறிஞ்சிப்பறை.
கொண்மூ-மேகம், சுழிற்றித் திரிதல், ஆகாயம்.
கொண்டைக்கிரி-இராகம்.
கொண்டை-மயிர்முடி, இலந்தைக்கனி.
கொத்தம்-எல்லை.
கொதித்தல்-சினக்குறிப்பு.
கொந்தம்-சிறுசவளம், பெருஞ்சவளம், சோம்பல்.
கொந்தளம்-மயிர்க்குளற்சி, மாதர்மயிர்க்கொத்து.
கொப்புரை-கிடாரம்.
கொப்பூழ்-உந்தி.
கொப்புள்-உந்தி, நீர்க்குமிழி.
கொப்புளம்-மொக்கன் வடிவு.
கொப்பு-மயிர்முடி, மரத்தின் பணை, மகளிர்காதணி, தெய்வவுணவு.
கொம்பர்-முருங்கை மரத்தின் கொப்பு.
கொம்பு - விலங்கின் மருப்பு, வாச்சியம், மரத்தின் கொப்பு.

கொம்பனியல்-தேனீ.
கொம்மெனல் - அனுகரண வோசை.
கொம்மை-வட்டம், திரள் வடிவு, இளமை, கொங்கை, குவித்துக்கொட்டல்.
கொம்பீரம்-ஆழநீர்.
கொய்யுளை-குதிரை.
கொய்யடி-நாரை.
கொய்தல்-அறுத்தல், பறித்தல்.
கொல்லை-சேனை, புனல்.
கொலை-வெகுளி.
கொல்லிச்சிலம்பன்-சேரன்.
கொல்லர்-கண்ணுளர்.
கொலம்-நீரோட்டம்.
கொல்-கோறல், ஐயம், அசைச் சொல், வருத்தம், ஏவல்.
கொல்லும்-ஐயுற்ற சொல்.
கொல்லி-இராகம்.
கொல்லிவராடி-இராகம்.
கொல்லாவேதன் - புத்தக் கடவுள்.
கொலைஞர்-சண்டாளர்.
கொழுமலர்-ஆம்பல்.
கொழித்தல்-பே(ா)ரொலி.
கொழுநன் - பத்தா, எல்லா முடையோன்.
கொழிப்பு-குற்றம், கொழித்தல்.
கொழுநுகம்-மகம், கொழுவின் முனை.
கொழுந்து-நீரோட்டம்.
கொழுங்கோல்-உத்திரட்டாதி.
கொழுங்கிரி-உடை மரம்.
கொழுமை-வளமை, கொழுப்பு.
கொழுத்து-துடை.
கொழுப்பு-நிணம், வளமை,
கொள்ளம்-குழைசே(ா)று, சேறு.
கொள்ளி-நெருப்புறுவிறகு.
கொள்ப-வேறுபாடு.
கொள் - கொ[ள்*]ளென்றல், உரோசப்பட்டஒலி.
கொளை - பாட்டிசை, பாலை நிலத்தியாழ்.
கொள்கலம்-பாண்டம்.
கொள்-மிளகு, காணம்.
கொற்றவன்-இராசா.
கொற்றவள்-பகவதி.
கொற்றல்-ஓட்டுதல்.
கொற்றம்-அரசி[ய*]ல், வெற்றி, வலி, புகழ்.
கொற்றி-வடுகி, துற்கை, கோவிளங்கன்று.
கொற்றை-துற்கை.
கொறி-மேடவிராசி, ஆடு, செம் மறியாடு.
கொறன்-தேன்கூடு.
கொற்று-கூலி.
கொன்-அச்சம், பயமிலி, காலம், பெருமை.
கொன்னை-பயனிலாமை, காலம், பெருமை, அச்சம், வலி.
கொன்றை-இதளி, இராகம்.

கொகரம் முற்றும்

சகரம்

சகடம்-சாடு, உரோகணி, ஊர்க்குருவி, சிவிகை.
சகம்-பூமி, சட்டை, ஆடு.
சகடை-பேரிகை, வாச்சியம்.
சகசரம்-குறிஞ்சியாழ்.
சகாரி-முத[ல்*]வள்ளலிலொருவன்.
சகடு-வண்டி, உரோகணி.
சகதி-சேறு.
சகளன் - ஒரு குடியிற்கொண்டோன்.
சகரன்-முதல்வள்ளல்.
சக்கிரன்-இந்திரன், மால்.
சக்கரம்-கடல், பூமி, நேமி, சகடை, பேரிகை, தேருருள், வட்டம், துயிலொழிதல், பெருமை, பிறப்பு, மலை, சக்கிரவாகப்புள்.
சக்கிருயுதன்-மால்.
சக்கிருயுதி-பகவதி.
சக்கிரி-பாம்பு, குயவன், சக்கரன், தராபதி, நெடுமால்.
சக்குலி-அப்பம்.
சக்கு-கண்.
சக்கம்-கீறு, வட்டில்.
சகுடம்-சேம்பு, சோம்பு.
சகுலி-மசியம்.
சகுனம்-பறவைப்பொது, கிழங்கு, நிமித்தம்.
சகுனி-பறவை, நிமித்தம்பார்ப்போன்.
சகோரம்-வெண்குருகு, ஆந்தை, நிலாமுக்கி.
சகித்தல்-பொறை.
சகாயம்-துணை.
சகி-தோழி, அச்சமுள்ளோன்.
சகுந்தம் - பறவைப்பொது, பூதம்.
சங்கு-கோழி, எண், படைக்கலம்.
பணிலம், கைவளை, கூடுதல்.
சங்கிராமம்-போர்.
சங்கனனம்-நரம்பு.
சங்கை-ஐயம், அளவிடப்பட்டது.
சங்கிரணம்-துழாவல்,
சங்காழி-மால், பத்திரகாளி.
சங்கிலி-தொடர், வயிரச்சங்கிலி.
சங்கம்-ஊர்க்குருவி, கூட்டம், பணிலம், சங்கநிதி, புலவர், கணைக்கால், கூடுதல்.
சசமுயல்-...............
சசலம் - தெளிந்த தண்ணீர், தாமரை.
சசி-இந்திராணி, சந்திரன், கற்பூரம்.
சசிமணாளன்-இந்திரன்.
சச்சை-வெள்ளாட்டேறு, செறி, குளம்பு.
சச்சு-பறவைகளின் மூக்கு.
சஞ்சிலதரணி-உயிர்தருமருந்து.
சஞ்சலை-மீன்.
சஞ்சரிகம்-வண்டு.
சஞ்சாரிகம்-வண்டு.
சஞ்சலம்-துக்கம்.
சடம்-உடம்பு, பாறு, பெய், பொய், கொடிமை.
சட்பம்-இளம்புல்லு.
சடரம்-வயிறு.
சட்டம்-துயிலமளி, கிடுகு.
சட்டித்தல்-அழித்தல்,

சட்டுவம்-சந்தனம், தேர் அகப்பை.
சட்டகம்-பேய், வடிவு, மாந்தர் துயிலிடம்.
சடுதி-விரைவு.
சடிலம்-மயிர்ச்சடை, செறிவு, உடம்பு, குதிரை, பெருகல்.
சடைச்சி-நீர்ப்பாசி.
சடை-வேணி, வேர்.
சடையன்-வீரபத்திரன், சிவன், சடையையுடையோன்.
சண்பனி-யோகினி,
சண்டிகை-மாகாளி, துர்க்கை.
சண்முகன்-அறுமுகன்.
சண்டை-பேரிகை, கலகம்.
சண்டன்-நமன், ஆதித்தன்.
சண்டகன்-அலி.
சண்ட[ம்*]-தீமை, கொடிமை, விரைவு, அலி, குறிப்பு.
சதபத்திரி-தாமரை.
சதாசம்-பரன்
சதாகதி-காற்று.
சதாநந்தன்-பிரமா.
சததிரி-தாமரை.
சதங்கை-பாதகிண்கிணி, அசை நூல்மாலை.
சதுக்கம்-நாற்சந்தி, அங்காடி.
சதுரங்கம்-ஆனை, தேர், புரவி, காலாள்.
சதம்-இலை, நூறு, புள்ளிறகு.
சதனம்-இலை, பறவையுள் ளிறகு, எச்சரிக்கை.
சதபத்திரை-இலை.
சத்தம்-பூமி, ஒலி.
சத்தி-சூலம், வேல், பாறுவதி, குடை, வலி, கான்றல்.
சத்தியம்-சபதம், மெய்.
சத்தகம்-தலைக்கருவி.
சதகோடி - வச்சிராயுதம், தொகை.
சத்திரம்-அழகு, பொய், வெண் கவிகை, அன்னசாலை, கைவிடாவேல், வேள்வி.
சதக்கிருது-இந்திரன், நூறு வேள்வி.
சதுத்தர்-சூத்திரர்.
சதுரம்-கள்ளிமரம்.
சதுர்த்தல்-அப்புதல்.
சது-தாளவொத்து, ஓராகண, கெற்பாட்டி, விடம்.
சதுமுகன் - பிரமா, புத்தக் கடவுள்.
சதுரர்-நகரப்பதி வாழ்வோர்.
சந்திமான்-இடைவள்ளல்.
சந்திரிகை-பிறகாசம்.
சந்தோபிசிதி-...........
சந்தாபம்-சுறுக்கெனச்சுடல்.
சந்தில்-சனி.
சந்திர திலகம்-சந்தனம்.
சந்து-சந்தனம், துடை.
சந்தா-நாற்சந்தி.
சந்தி-மூங்கில், அந்தி, சதுக்கம், ஓரிசை.
சந்திரன்-சோமன்.
சந்திரம்-பொன்.
சந்திர[ர*]ங்கம்-மயிற்பீலி.
சந்திரகாந்தம்-சந்திரனொளியில் நீருமிழ்வது.
சந்தனம்-கற்பகம், சந்தனம்.
சந்தம்-நிறம், அழகு, ஓசை, உவமை, கவிதை, சாந்து, வடிவு.
சந்தசத்திகை-மரத்தின் கொடி.
சந்ததி-புதல்வன்.
சந்தப்பாட்டு - இருபத்து நாலெழுத்து நான்கடியா யுற்றது.

சந்தானம் - புதல்வன், கற்பக தரு.
சந்தானகரணி - துண்டமான வுறுப்பைப் பொருந்தப் பட்டமருந்து.
சந்ததம்-இன்பம், இடைவிடாம லெனவுமாம்.
சபதம்–ஆணை.
சபரம்-கெண்டைமீன்.
சமரம்-பூசல்.
சம்பம்-வச்சிராயுதம்.
சம்வாகம்-மலை மேலூர்.
சம்மட்டி-குதிரைக்கசை அடிக் கும் கூ(ட்)டம்.
சம்பரம்-சிம்புள்.
சம்படம்-பி(ண்)டவை.
சமவாயம் - திரண்டோர்பேர், கூட்டம்.
சமட்பு-இலச்சை.
சமங்கை-வறட்சுண்டிப் பூடு.
சம[ப்]பால்-முல்லை நிலம், நெய் தல் நிலம்.
சமன் - சிவன், மறலி, போலி, நடுவு.
சம[ம்*] - பூசல், நடு இன்பம், உவமை.
சம்[க*]ளிதம் - கலப்பு, நாணு வனம்.
சமாதி-சாவு.
சம்பிதம்-நடுக்கம்.
சம்பு-நரி, நாவல், பிரமா, சிவன். விட்டுணு, தலை.
சமரி–துர்க்கை.
சம்பரம்-தண்ணீர்.
சம்பை-மீன்.
சம்பகம் - எலுமிச்சு, வச்சிரம், இரும்பை வாங்கும் மணி.
சம்பளம்-ஆட்டின் ஆண்பால்.
சம்பருதனன்-காமன்.
சம்பிராதி-காமன்.
சம்பீரம்-எலுமிச்சு.
சம்பரார்த்தம்-முழுதும்.
சமனகரணி - தழும்பு மறை விக்கும் மருந்து.
சம்பங்கோழி-கம்புள்.
சமள்த்தல்-வருத்தம், நாணம்.
சம்பிரதம்-சித்து.
சமை-போர், பொறுதி.
சயித்தல்-இறத்தல்.
சமைத்தல்-அமைத்தல்.
சமையம் - பனுவல், கூட்டம், சட்சமையம்.
சமீரன்-காற்று.
சமிதை-ஓமவிறகு, விறகு.
சமித்து-ஓமச்சமிதை.
சமி - வன்னிமரம், அருகக் கடவுள்.
சமீகம்-பூசல்.
சமுதாயம் - திரண்டோர் பேர், கூட்டம்.
சமுகம்-திரண்டோர்பேர்.
சயனம்-துயிலமளி.
சயந்தனம்-தேர்.
சயம்-ம[ா*]லை, அல்லி, மகள், சற்கரை, பானு, வெற்றி.
சயம்பு-புத்தக்கடவுள்.
சயந்தன்-இந்திரன்.
சயமகள்-பகவதி.
சயமுறு-தேவராளன்.
சயிலாதி-வெள்ளியங்கிரி.
சயிரிகம்-கிடா.
சயிலம்-மலை.
சயிந்தவம் - குதிரை, தலை, இந் துப்பு.
சரண் - கால், அடைக்கலம்.
சரசு-மடு, ஓடை.
சரணம் - கால், அடைக்கலம், இசை, மயிற்பீலி, மருத நிலத்தூர்.

சரம் - அம்பு, நாசியோட்டம், தனம், துடர், நாணற் புல்லு.
சரதம்-உண்மை.
சரணுயுதம்-கொக்கு.
சரடம்-ஓந்தி.
சரபம்-சிம்புள், வரை.
சரவணம்-நாணல்.
சராவம்-அகல், இசை, தாவடி லாகல்.
சரோருகம்-தாமரை.
சராசனம்-வில்லு.
சரேலென்றிட்டல் - அநுகரண வோசை.
சரி-சந்தனம், கற்பூரம், கைவளை, சமன், கடல், மழை, வழி.
சரிசை-பிச்சை.
சரியை-பிச்சை.
சரிதை-நல்லொழுக்கம்.
சரிசபம்-தவளை.
சரிதை-ஒழுக்கம்.
சரித்தல்-நடக்கிறது.
சரிதல்-சாய்தல்.
சரை-ந(ர)ரை.
சருக்கம்-நூல்முடிவு.
சரு-சோறு, தெய்வவுணவு.
சருவம்-சருவசட்டி, பானை.
சருமம்-தோல்.
சலசம்-தாமரை.
சருத்தி-துகிற்கொடி.
சல்லபம்-முட்பன்றி.
சல்லி-வடம், கீரை, தேருருள், கீழ்வீடு.
சலசை-லெட்சுமி.
சலசலோசனன்-விண்டு.
சல்லியம்-முட்பன்றி.
சல்லியன்-வெள்ளிபகவான்.
சல்லிசி-ஆத்திமரம்.
சலவர்-நெய்தல்நிலமக்கள்.
சலசரம்-மீன், மீனவிராசி.
சலராசி-கடல்.
சலநிதி-கடல்.
சலதி-கடல்.
சல[பம்]-விட்டில்.
சலாகை - அகன்மணி, இருப்பு, நாராசம், தவளம், நன்மணி.
சலாங்கம்-பொய்யாப்புள்.
சல்லரி - பலவகை வாச்சியம், திமிலி என்னும் வாச்சியம்.
சல்லம்-கரடி,
சல்லியகரணி - தைத்த ஆயுதங்களைத் தணிக்கப்பட்டது.
சலஞ்சலம் - வலம்புரிகள் சூழப் பட்டது.
சலன[ன்*]-காற்று.
சலனம்-பாதம்.
சலம் - நீர், கோபம், சீ, விட்டில், மலை, வஞ்சனை, வயிரம், பொய், கரடி.
சலியன்-மலைநீர்.
சலதி-கடல்.
சலிலம்-நீர்.
சலிகம்-பூசல்.
சல்லாபம்-விரும்பிய பொருள்.
சவட்டல் - அடித்தல், கொலை செய்தல்.
சவலம்-நிறைவேறல்.
சவரி-கவரிமா, கெருடன், மால், சனி.
சவலை-மீன்.
சவனன்-வஞ்சகன்.
சவரர்-வேடர்.
சவனம்-பிணம், பேய், விட்டில்.
சவ்வனகரணி - மேல் விர[ண*]ங்களைத் தீர்க்கப் பட்டது.
சவவு-மூஞ்சூறு.
சவிதா-ஆதித்தன், நாரணன்.

சவி-அளகு, மணிக் கோ(ர்)வை, காந்தி, பிறபை.
சவிசேடம்-பேதம்.
சவசம்-பணிகம்.
சவுரி - சனி, திருமால், துர்க்கை, கண்ணன், நமன்.
சவுண்டிகர்-கள்ளுவிற்போர்.
சவுரியம்-வீரம்.
சவுமன்-புதன்.
சவை-திரண்டோர்.
சவைமகள்-மிதுனம்.
சழக்கு-குற்றம்.
சழுக்கிவேந்தன் - குறுநில மன்னன்.
சற்பம்-அகங்காரம், பாம்பு.
சற்சரை-பிணர் வடிவு.
சறுவன் - சகலலோகமும் வரம்-பழியாமற் காக்கிற விட்டுணு.
சன்மலி-இலவமரம்.
சனவிசம்-காந்தி.
சனபதை-நாடு.
சனனம்- பிறவி.
சன்னத்தம்-ஆயத்தமானேன்.
சன-வியாளம்.
சனி - குற்றம், கீழ்மை, சனி, மகம்.
சனிப்பு-பிறவி.
சனியர்-கீழ்மக்கள்.
சனம்-கூட்டம்.
சன்னம்-கலிப்பு.
சனகன்-தகப்பன், சனகராசன்.

சகரம்முற்றும்

சகர இகரம்

சிகண்டி - மயில், மவுலி, அலி, இராகத்திலொன்று, வியாழம்.
சிகரி - எலி, கோபுரம், மலை, நாரை, அங்காடி.
சிகழி-மயிர்முடி, மாலை, அணியப்பட்டது, வாசிகமாலை.
சிகரம் - கவரி, உறி, கரகம், துவலை, மலை, மலையுச்சி, கிரை, சென்னி, உலம்.
சிகச்சி-நெருப்பு.
சிக்கம்-உச்சிமயிர், சீப்பு, உறி, தலைக்கவசம், மெலிவு.
சிக்கரம்-கள்ளு.
சிக்கிரி-ஓர்மரம்.
சிக்கிடி-அவரை, பயறு.
சிகி-மயில்.
சிகுவை-நாக்கு.
சிகை - ஆண்மயிர், உச்சிமயிர், சமணிக்கை, கொல்லனுலை.
சிக்கல்-இளைத்தல்.
சிகாவளம்-மயில்.
சிங்குதல்-கெடுதல்.
சிங்கல்-குறைதல்.
சிங்களம்-ஈளனும்.
சிங்கம்-சீயம்.
சிங்கத்துவசன்-வீமசேனன்.
சிங்கி-நஞ்சு.
சிங்கிலி-பறவை.
சிறுர் - பிள்ளையள், வண்மை, வழக்கு.

சிறை - சிக்கு, காவல், பறவை யிறகு, பக்கம், வேறிடம்.
சிறுசொல்-பழித்தல்.
சிறுவிதி-வீரபத்திரன்.
சிறுகால்-தென்றல்.
சிறுகிராமம்-நூறு குடியுள்ளது.
சினகரம்-கோயில்.
சினவரன்-அருகக் கடவுள்.
சினந்தவிர்ந்தோன் - புத்தக் கடவுள்.
சினவுதல்-உயுத்தம்.
சினம்-கோபம்.
சின்னம்-சிதறப்பட்டது, அழகு, உளப்பட்ட வாச்சியம்,அரைப்பாளம், அற்பம்.
சினன்-புத்தன்.
சினை - கரு, மரக்கோடு, பூ மொட்டு, கள்ளு, உறுப்பு, முட்டை, மீன், பெருகுதல்.
சினேந்திரன்-அருகக்கடவுள்.
சினேகம்-அபிக்கம்.
சிசுபாலன்-இடைவள்ளல்.
சிஞ்சு ம...ப-பிரசாபதி ஆக்கிய விட்டுணு.
சிஞ்சி-தாய்.
சிஞ்[சி*]னி-வில்லின் நாண்.
சிட்டி[த்*]தல்-படைத்தல்.
சிதடி-சில்லூறு, குருடி.
சிதல்-சிவற்குருவி, கறையான்.
சிதலை - கறையான், நெ[ல்*]லு, நோய், துணிதல், செல்.
சிதர்-வண்டு, துவலை, சிந்துதல், உறி.
சிதடன்-குருடன், மூடன்.
சிதறுதல்-தூவுதல்.
சிதன் - வெள்ளி, சந்திரன், மேகம், குளிர்ச்சி.
சிதவல்-சீரை.
சிதார்-சீரை.
சிதறி - மேகம், தாளம், தண்ணுமை, வாச்சியம்.
சிதம்-வெள்ளை, ஞானம், செயம், நக்கெத்திரம்.
சிதம்பி-குணமின்மை.
சித[க]ம்-தூக்கணங்குருவி.
சித்தி-பெய், முத்தி...
சித்திரன்-தைச்சன், ஓவன்.
சித்திரம் - காடு, நல்லாடை, அழகு, விம்மிதம், ஏரண்டம், மெய்யேபோலப் பொய்யுணர்த்தல், கோல், வடிவு.
சித்திரப்படம்-பொத்தகம்.
சித்தை-கீழ்மக்கள்.
சித்திலிகை-நல்லாடை.
சித்தம்-மனம்.
சித்தன் - புத்தக்கடவுள், கேத்திரபாலன்.
சித்தசன்-காமன்.
சித்திரபானு - ஆதித்தன், அக்கினி.
சித(ற்)றல்-தூவல்.
சித்திரை-மாதம், நாள்.
சித்திரகாயம்-புலி.
சித்திரபுங்கம்-அம்பு.
சித்திரவெளா - கொல்லி இராகம்.
சித்தரத்தம்-கடுகு.
சிதைத்தல் - அழித்தல், ஒலித்தல்.
சிதைவு-கேடு, தேய்தல்,
சிதி-கறுப்பு, இது வியாக்யானத்துக்குள் கண்டது.
சிந்து - மாயன், குறள், கடல், ஆறு, சிவப்புநிறம், தண்ணீர், முச்சீர், வெட்சிமரம்.

சிந்துரம் - ஆனைமதம், திலகம், சிவப்[பு*], புளி, ஆனை.
சிந்தூரம்-வெட்சி, சிந்துருணம், பொட்டு, செம்மை, செங்கிடை.
சிந்துவாரம் - வெண்ணொச்சி, வில்லு.
சிந்தர்-கொடியன்.
சிந்தை-மனம், நினைவு.
சிந்தம்-புளி.
சிந்தகம்-புளி.
சிந்தித்தல்-நினைத்தல்.
சிப்பியர்-கண்ணாளர்.
சிம்மை-வரைப்பயறு.
சிம்புளாவோன்-வீரபத்திரன்.
சிம்புளி-செம்படாம்.
சிமி-உச்சிமயிர், உறி, கீள்வீடு.
சிமிழ்த்தல்-கட்டுதல்.
சிமையம்-இமவான், பறுவதம், மலையுச்சி, மலை.
சிரவம்-கவுதாரிக் குருவி.
சிரே(ர)ணி-ஆயர்வீதி.
சிரற்றுதல்-எழுத்தோசை.
சிரதரம்-கழுத்து.
சிரம்-தலை, நெடுங்காலம்.
சிரவணம்-திருவோணம்.
சிரலை-சிறுபயறு.
சிரல்-முடிவிடம், பறவை, உளர்தல், கவுதாரி.
சிரகம்-கரகம், தலைக்கிடு கவசம்.
சிரோந்தம்-மயிற்செறிவு.
சிரை-நரம்பு, மரவுரி.
சிரற்றல் - எழுத்தோசை, ஒலித்தல்.
சிருகாலன்-நரி.
சிருங்கம்-விலங்கின் கொம்பு.
சிருங்காடகம்-நாற்கால் சந்தி.
சிருங்கலை-குதிரைக் காற்றளை.
சிலம்பி-சிலந்தி.
சிலதையர்-ஏவல் செய்வோர்.
சிலகம்-சட்டுவம்.
சிலதன்-பாங்கன்.
சிலதர்-சேடியராய் வேலை செய்வோர்.
சில(த்)தியர்-வேலை செய்வோர்.
சிலதி-தோழி.
சிலட்டியர்-வணிகர்.
சிலவர்-வேடர்.
சிலம்பு - மலை, ஒலி, காலணி, பரிபுரம், பரிசை.
சில[ர*]வட்டம்-சாணைக்கல்லு.
சிலம்பன் - குறிஞ்சிவேந்தன், கந்தன்.
சிலம்பல்-ஒலித்தல்.
சில்லம்-தேற்றுமரம், சின்னம்.
சிலும்பல்-ஒலித்தல்.
சிந்தி-வியாதி, சீந்தில்தண்டு.
சிலை-கோபம், மலை, வில்லு, சிரணகல்-ஒலி, தனுவிராசி, கல்.
சிலைத்தல்-ஒ[லித்த*]ல்.
சிலீமுகம்-வண்டு, அம்பு, முலைக்கண்.
சிலோச்சயம்-மலை.
சிலி[ர்*]த்தல்-தளிர்த்தல்.
சில்லை - சிள்வீடு, பர(ா)ண்டையெனுங்குருவி, தூர்த்தை.
சில்லி-தேர்க்கால்சக்கரம், சலம், சிள்வீடு, சிறுகீரை, வட்டம்.
சில்லிகை-சிறுகீரை, நல்லாடை, சிள்வீடு.
சில்லார்-ஐந்து நிலத்துப் பொதுமக்கள்.
சிலாகை-சூரியகாந்தம், தெய்வகணம், மணிப் பொதுப்பேர், சந்திரகாந்தம், இரு[ம்*]பை வாங்குமணி, கொல்லனுலை.
சிலேகம்-சிந்தூரம்.

சிவணல்-கூட[ல்].
சிவிறி-துருத்தி.
சிவல் - கவுதாரி, சிவற்குருவி மேடு.
சிவை-மரவேர், பாறுவதி, ஓரி.
சிவேதை-பகன்றைப் பூ, தென் திசை.
சிவப்பு-நிறம், சினத்தின் குறிப்பு, சிவிளிகை.
சிவணல்-பொருந்துதல்.
சிவத்தல்-கோபம்.
சிவகதி-புத்தக்கடவுள்.
சிவம்-நன்மை, முத்தி, சுத்தம்.
சிள்வீடு - சில்லூறெனும் பறவை.
சிவன்-விட்டுணு, ருத்திரன்.
சிள்-ஆரவாரம்.
சிறுதாரை-துருத்தி.
சிறுவரை-சிறுபொழுது, சிறு மலை, காலவிரைவு.
சிறுமுலகம்-திற்பலி.
சிறுகுதல்-குறைதல்.
சிறுகாடு-செங்கருங்காலி.
சிறுவன்-புதல்வன்.
சிறுவி-புதல்வி.
சிறுமை-கீழ்மக்கள், சிறியது, வறுமை, துக்கம்.
சிறுமனை-செதங்கை.
சிறுபுறம்-பிடர்.
சிற்றூர்-குறிஞ்சிநிலத்தூர்.
சிறுமா-செங்கருங்காலி.
சிறுமி-பெண்.
சிறுகுடி-ஊர்.
சிறப்பு இல்லாதாள்-மூதேவி.
சிற்றில்-கூரை.
சிறுபறை-நெய்தற்பறை, துடி யெனும் வாச்சியம்.
சிறக்கணித்தல் - கடைக்கணித் தல்.
சிறந்தோர்-சுற்றம்.
சிறப்பு-மிகுதி.

சிகரம் முற்றும்.

சகர உகரம்

சுக்கிலம்-வெள்ளை, இந்திரியம்.
சுகுமாரன்-மென்மை.
சுகிர்-உட்டுளை வடிவு.
சுகன்-வெள்ளி, கிளி.
சுகம்-இன்பம், கிளி.
சுக்கிரன்-வெள்ளி.
சுகுர்தம்-தருமம்.
சுக்கை-நக்கெத்திரம், மாலை.
சுச்சு-சுண்டிப்பூடு.
சுங்கன்-வெள்ளி பகவான்.
சுங்கம்-உலகிறை.
சுசி - வெண்மை, தீ, சுத்தம், கோடை.
சுடாரி-கவசம்.
சுடர்-ஆதித்தன், மதி, அக்கினி பதியும் விளக்கு, ஒளிர்தல், தீபம்.
சுடரவன்-ஆதித்தன்.
சுடர்க்கடை-மயில், மின்மினி,
சுடர்தல்-ஒளிவிடுதல்.
சுடலை-சுடுகாடு.

சுட்டி - நுதற்பட்டம், நாக்கு, தலைச்சுட்டி, நுதற்குறி.
சுட்டி-குறித்திடல்.
சுடிகை - நுதற்சுட்டி, உச்சி, கிரீடம்.
சுடிலை-ஈட்டி, கை, குயக்கலம்.
சுட்டுப்பேர்-அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன்.
சுடுவனம்-உதிரம்.
சுடுநிலம்-சுடுகாடு.
சுடு-சும்மாடு.
சுணங்கு - தேமல், முலை மேற்றோன்றுங்குறி, நிறம்.
சுணங்கன்-நாய்.
சுண்டன்-சதையம், மூஞ்சூறு.
சுண்ணம்-புழுதி.
சுண்டி-சுக்கு.
சுண்டை-பச்சிலைப்பூடு, கள்ளு.
சுதன்-மகன்.
சுதாகரன்-சந்திரன்.
சுத்திகை-அகலெனும் பாத்திரம்.
சுதம்-கேடு, அவதாரம்.
சுதை - சுடுசுண்ணச் சாந்து, அமுது, குணமில்லாப் பசு, அக்கினிபகவான்தேவி, மகள்.
சுதரிசனம்-சக்கரம்.
சுத்தி-சங்கு, அகலெனும் மண் கலம், சுத்தம்.
சுத்தம்-கருத்து, பவுத்திரம், தருப்பை.
சுந்தரி-இந்திராணி, மூஞ்சூறு, துர்க்கை, பெண்.
சுந்தரம்-அழகு.
சுபம்-சுத்தம், வெள்ளை நிறம், அழகு.
சுப்பிரம்-வெள்ளை நிறம்.
சுமனசம்-மலர்.
சுமம்-மலர்.
சுமடு-சும்மாடு.
சுமை-சும்மாடு.
சுமடர்-கீழ்மக்கள்.
சும்பு-குடம்.
சுமாலி-கள்ளு.
சும்மை-ஆரவாரம், நாடு, ஊர், நெருக்கம்.
சுயோதனன்-திரியோதனன்.
சுயோகி-கள்ளு.
சுரம் - காடு, கரிந்த காடு, வெதுப்பு, வெப்பம், வழி, அருநெறி.
சுரதம்-புணர்ச்சி.
சுரர்குரு-பூசநாள்.
சுரர்-தேவர்.
சுரர்மரம்-கற்பகதரு.
சுரர்நதி-கங்கை.
சுரிகை-உடைவாள், கவசம்.
சுரிமுகம்-சங்கு, நத்தை.
சுரி-நரி, கைவளை
சுரியல்-ஆண்மயிர், மாதர் மயிர், நீர்ச்சுழி, சுழற்றல்.
சுரை-முகம், நாய், சுரைப்பூடு, பசு, கள்ளு, உட்டுளை வடிவு, ஆவின்முலை.
சுருக்கல்-கட்டுதல், மாலை.
சுருதி-வேதம், ஒலி.
சுருங்கை-நுழைவாயில், கரந்து பண்ணுங் கற்படை.
சுருதம்-விரைவு, துக்கம்.
சுருங்கல்-குறைதல்.
சுருக்கு-நெய்த்துடுப்பு.
சுருவை-நெய்த்துடுப்பு.
சுருமகிரம்-கரண்டான், மூஞ்சுறு.
சுருள்-மாதர்மயிர், தாமரை மலரினிதழ்.

சுரும்பு-நாண், வண்டு.
சுலவல்-சுழற்றுதல்.
சுலனி-கள்ளு, முதுகு.
சுலவுதல்-சுழற்றி.
சுலன்-அங்கி.
சுல்லி-அ[டுப்பு*]
சுலு-செ[ம்பு*]
சுலோபம்-எறும்பு.
சுலோகி-கள்ளு.
சுல்லு-வெள்ளி.
சுவடு-இரண்டு, அடிப்பாடு.
சுவணம்-பொன்.
சுவல்-பிடரி, மேடு, கொல்லை, புயத்துமெலிவு.
சுவா-நாய், அக்கினிபகவான் தேவி.
சுவவு-பறவைகளின் மூக்கு.
சுவாகதம்-கிளி, வருத்தம், மாற்றுதல்.
சுவல்-புள்ளின் மூக்கு.
சுவற்குகம்-சுண்டன்.
சுவாகு-எறும்பு, தவளை.
சுவாமி-சுப்ரமணியன், பொன், ஆசான்.
சுவன்றம்-பொன்.
சுவாலை-எழுகிற அக்கினி.
சுவலை-அரசமரம்.
சுவிகை-கள்ளு.
சுவை-இனிமை
சுவற்கம்-தேவலோகம், முலை.
சுவப்பிரம்-நரகம்.
சுவேதம்-வெள்ளை நிறம், வேர்வு, சேரன்மாலை.
சுவு-காற்று, ஏற்றை.
சுவேதவாகனன்-அருச்சுனன்.
சுவாதர்-கள்ளுவிற்போர்.
சுவாதம்-மூக்கு.
சுழல்வு-சுழலுதல்.
சுழல்படை-பார[ா*]வளையம்.
சுளி-கள்ளு.
சுள்ளி-ஞாழல்மரம், மராமரம்.
சுளகு-முறம், விசாகநாள்.
சுளி-துளை, வட்டம்.
